# புதிய பூமி

**PUTHIYAPOOMI** පුදිය පූමි

சுற்று 1 நவம்பர் 1994 விலை ரூபா 7/= சுழற்சி

## அரசாங்க சாப்பாடு

நாலு பேரைக் கொண்ட ஜனாதிபதி பிரேமதாஸ குடும்பத்தின் ஒரு வருடச் சாப்பாடுச் செலவு ரூ.1.3400,000

| | |
|---|---|
| ★ ஒரு நாள் சாப்பாட்டுச் செலவு | ரூ.36712/32 |
| ★ காலை சாப்பாட்டுச் செலவு | ரூ.7342/46 |
| ★ பகல் சாப்பாட்டுச் செலவு | ரூ.14,684/92 |
| ★ இரவு சாப்பாட்டுச் செலவு | ரூ.14,684/92 |

(ஒருவரின் ஒரு நாள் சாப்பாட்டுச் செலவு ரூ.9178/07)
அரசாங்க செலவில் சாப்பிடுவதென்றாலும் இப்படியா....

## பாதை மாறக்கூடாது
# பயணம் தொடர வேண்டும்

**கா**மினி திசாநாயக்கா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வெளிவந்ததும் சகல மக்கள் மத்தியிலும் உருவாகிய முக்கிய கேள்வி யார் செய்தது? எதற்காக செய்யப்பட்டது என்பதல்ல. முக்கிய விவாதம் பொருளாக அமைந்த விடயம் தொடங்கப்பட்ட சமாதானப் பயணம் தடைப்படுமா? அல்லது கைவிடப்படுமா அன்றி தொடருமா? என்பதோயாகும். ஆனால் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவும் பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுரத்த ரத்வத்தையும் மிகவும் நிதானத்தடன் மக்களுக்கு அறிக்கை அளித்தனர். பழைய ஆட்சியின் தலைவர்களின் பேரினவாத நிலைப்பாடு கொண்ட அறிக்கைகளையும் பேச்சுக்களையும் போன்ற பாணியில் அன்றி நம்பிக்கை தருவதாக இருந்தது. மேற்படி நிதானப் போக்குடைய அறிக்கைகளினால் பேரினவாதிகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைக்குச் செல்வதற்கு ஆயத்தமாகி ஆறு மணித்தியாலங்களைக் காத்திருந்த வேளையிலேயே மேற்படி குண்டுச் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. தற்காலிகமாக யாழ்ப்பாணப் பயணத்தை நிறுத்திக் கொண்ட அரசாங்கம் பெரும் இக்கட்டான நிலையிலும் கூட மிக நிதானமாக நடந்து கொண்டமை வரவேற்கத் தக்கதாக அமைந்தது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் ஜனாதிபதி வேட்பாளரும் தமிழர்களுக்கு பற்றிரியும் மின்சாரமும், சிங்களவர்களுக்குப் பாணும், பருப்பும் என்றவாறான இனவாத சுலோகங்களையும் பிரசாரப்படுத்தத் தொடங்கி இருந்தனர். இச் சம்பவம் நடைபெற்றதும் ஒருபடி மேலே சென்று அரசும் புலிகளும் கூட்டுச் சேர்ந்தே குண்டு வெடிப்பை நடாத்தினர் என்றும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களே இதனைச் செய்தனர் என்றும் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டனர். இதன் மூலம் இனவன்செயல் ஒன்றுக்கு பெரும் முயற்சிகளையும் செய்தனர். இவ்வாறெல்லாம் முயன்ற போதும் சிங்கள மக்களை உணர்ச்சி வசப்படுத்தவோ குழப்பமடையச் செய்யவோ முடியவில்லை. அவர்கள் அரசின் நிதானம் போக்கிற்கு ஆதரவு கொடுத்தனர் அது மட்டுமன்றி ஏற்கனவே சமாதானத்திற்காகத் தொடங்கப்பட்ட முன் முயற்சிகளுக்குப் பூரண ஆதரவைத் தெரிவிப்பதாகவும் அமைந்தது. மத்திய மலையகப் பகுதிகளிலும் கொழும்பு மாவட்டம் பகுதிகளிலும் புதியபூமியின் செய்தியாளர்கள் தெரிவித்த கருத்துக்களின் படி காமினியின் படுகொலைச் சம்பவம் மக்களால் கண்டிக்கப்பட்ட அதேவேளை பழைய ஆட்சியின் சம்பவங்களை மக்கள் பகிரங்கமாகப் பேசிக் கொண்டமையை அவதானிக்க முடிந்தது. அத்துடன் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பது மீண்டும் மக்கள் மத்தியில் வலியுறுத்தப்பட்டமையையும் காணமுடிந்தது. இன்னும் பலர் முற்பகலிலே செய்தது பிற்பகலிலே விளையும் 'தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்' போன்ற முது மொழிகளையும் உதாரணம் காட்டி முன்னைய ஆட்சியின் செயல்களை விரிவாகப் பேசிக் கொண்டதையும் புதியபூமி செய்தியாளர்கள் கேட்க முடிந்தது என்றும் தெரியப் படுத்தினார்கள்.



யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த செய்திகளின்படி காமினி கொல்லப்பட்ட சம்பவம் எங்கனவே தொடக்கப்பட்ட சமாதானம் பேச்சுவார்த்தையை தடைப்படுத்தக் கூடாது என்பதில் மக்கள் அதிக அக்கறை காட்டி நிற்கிறார்கள் என்பதை அறிய முடிந்தது. அரசாங்கத் தரப்பில் இருந்தும் புலிகள் இயக்கத்திடமிருந்தும் ஆரோக்கியமான முன்முயற்சிகள் ஆரம்ப நடைமுறைக்கு வந்துள்ள ஒரு சூழலில் இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்றது சமாதானப் பாதை வழிதவறி விடுமோ என்ற அச்ச உணர்வையும் மக்கள் மத்தியில் அவதானிக்க முடிந்ததாயும் புதியபூமி செய்தியாளர் தெரிவித்தார்.

எனவே நாட்டின் பேரினவாத சக்திகள் தமது விருப்பங்கள் ஈடேறாமல் போனதையிட்டு அமைதி கொள்ள மாட்டார்கள். அவர்கள் பல்வேறு வழிகளில் தமது முயற்சிகளை தூண்டவே செய்வார்கள். அரசாங்கத்தினுள் இருக்கக் கூடிய இனவாத சக்திகளை எதிர் நிலை நிற்குமாறு தூண்டவும் செய்வர். பௌத்த மத பீடங்களிலும் இன்னும் பிற மையங்களிலும் உள்ள இனவாதிகளை களத்தில் இறங்குமாறு நிர்ப்பந்திக்கவும் செய்வார்கள்.

இவை அனைத்திற்கும் விட்டுக் கொடுப்பையோ அன்றி இசைவையோ காட்டாது. அரசங்கமும் அதன் பிரதமரான சந்திரிகா குமாரணதுங்கவும் தாங்கள் எடுத்த சரியான பாதையில் சமாதானத்தை நோக்கிப் பயணத்தை உறுதியாகத் தொடர வேண்டும். அதனையோ அனைத்து தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களும் எதிர் பார்க்கின்றனர்.

## காமினி படுகொலையின் பின்னணி

**இ**லங்கையின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு பதினாறு நாட்கள் இருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா கிரான்பாஸ் பாலத்துறை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டு விட்டார். அவரது முக்கிய சகாக்களான இரண்டு முன்னாள் அமைச்சர்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்படுகொலைச் சம்பவம் முழு நாட்டையும் அதிர வைத்துள்ளது. இப்படுகொலையைச் செய்தது யார் என்பதே இன்றுள்ள பலத்த கேள்வியாகும்.

காமினி திசாநாயக்காவிற்கு சுமார் கால் நூற்றாண்டு கால அரசியல் வரலாறு உண்டு. அவரது குடும்ப வர்க்க நிலைக்கு ஏற்றவகையில் இலங்கையின் ஆளும் வர்க்க அரசியலில் மிக இலகுவாகவே முன்னணிக்கு வந்தவர். பணபலமும் குடும்பப் பின்னணியும் அவரை பாராளுமன்ற உறுப்பினராக்கியதுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொடுத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் நாட்டின் உயர் ஆட்சிப் பதவியையும் குறிவைத்து செயல்பட்டும் வந்தவர். அவரது மரணச் சடங்கின் போதும் அல்லது அனுதாபச் செய்திகளில் குறிப்பிட்டவாறும் சகல ஜனநாயக நற்பண்புகளையும் இதர நல்லம்சங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு தலைவராக காமினியை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் உயர் வர்க்கத்தின் ஆட்சியதிகார நிலைப்பிற்கு மிக முக்கிய பங்காற்றியவர்களில் அவரும் ஒருவர். அந்த வகையில் அந்நிய சக்திகளுடன் மிக நெருங்கி உறவாடியும் வந்தவர். அவர்களது நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் திகழ்ந்தார். இவை மட்டுமன்றி தமது பேரினவாதத்தை மிகவும் நாசுக்காகப் பயன்படுத்தி நின்றவர். அதனால் சிறுபான்மை இனங்களின் அதிருப்திக்கும் வெறுப்பிற்கும் ஆளானவர். இவை எல்லாம் இருந்த போதிலும் சிதையுண்ட நிலைக்கு உள்ளான ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத்திற்கு காமினி ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகத் தோற்றமளித்த வேளையிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்பது அதன் பலத்த பின்னடைவு என்றே பேசிக் கொள்கிறார்கள்.

இத்தகைய காமினியின் படுகொலைக்கு பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. உட்கட்சிப் பூசல் புலிகளின் கைவரிசை சமாதான முயற்சிகளை முறியடித்தல் இந்திய உளவு நிறுவனங்களின் சதி போன்றவாறு சந்தேகங்கள் நீண்டு செல்கின்றன. மேற் கூறியவற்றை கவனத்திற்கு எடுப்பது முக்கியமானதே அன்றி அவைகளில் ஒன்றை போதிய ஆதாரங்கள் இன்றி முடிவானதாகக் கொள்ள முடியாது. காரணங்கள் இன்றிக் காரியங்கள் இடம் பெறுவதில்லை. எனவே காரணங்களைக் கண்டறிவதற்கு விரித்தாளவில் செல்வோமானால் கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட காலத் தொடர் ஆட்சியின் பல்வேறு அம்சங்களும் அலசலுக்குரியதாகும்.

1977ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தபோது அதன் ஆட்சித் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்தனா ஆணைப் பெண்ணாகவோ அன்றி பெண்ணை ஆணாகவோ மாற்ற முடியாத ஒன்றைத் தவிர ஏனைய சகலவற்றையும் தன்னாலும் தமது ஆட்சியாலும் செய்து கொள்ள முடியும் என்று கூறிச் சபதம் மேற்கொண்டார். அந்தச் சபதம் நாட்டிற்கும் மக்களுக்கும் பயன் உள்ளதாக அமைந்திருப்பின் நாடு இன்று இத்தகைய அவல நிலைக்குள் வீழ்ந்திருக்க நியாயமில்லை. எதேச்சதிகாரமும் பேரினவாத வெறியும் ஜனநாயக மனித உரிமை மீறல்களும் தொடர்

→ 11

www.padippakam.com





# "எதிர்க்கட்சியில் இருக்க மாட்டேன்"

– தொண்டமான்

நான் ஒருபோதும் எதிர்க்கட்சியில் இருக்கமாட்டேன். ஏனென்றால் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எனது மக்களுக்கு எதனையும் செய்து கொள்ள முடியாது. இவ்வாறு ஒரு வருடத்திற்கு முன்பே கூறியவர் சௌமியமூர்த்தி தொண்டமான். அவர் கூறியது போன்று இன்று புதிய அரசாங்கத்தில் ஓர் அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டு விட்டார். அதன் மூலம் தனது முன்னைய கூற்றினை நடைமுறைப்படுத்தியும் காட்டி விட்டார்.

கடந்த காலத்தில் தொண்டமான் ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் மிக விசுவாசமாக நடந்து கொண்டவர் என்பதை உலகறியும். இடையிடையே ஐ.தே.கட்சியை வெருட்டிக் கொள்வது போன்று காட்டி துணிவுள்ளவர் நம்ம தலைவர் தொண்டமான் என்ற மாயத் தோற்றத்தைக் காட்டி மறைந்து கொள்வதிலும் அவர் வல்லவர். அவ்வாறு ஐ.தே.கட்சிக்கு நம்பிக்கைக்குரிய நண்பனாக இருந்து வந்தவர் இப்போது அவர்களைக் கைவிட்டு புதிய அரசாங்கம் பக்கம் பாய்ந்து விட்டார். இவ்வாறு அவர் பக்கம் மாறுவதற்குரிய சூழலில் முக்கியமானது இதுவரை தன்னால் தோள் கொடுக்கப்பட்டு வந்த ஐ.தே.கட்சி சின்னாபின்னாமாகிக் கிடப்பது தான். ஜே.ஆர். தொட்டு காமினி வரை அவரது நெருங்கிய நட்பிற்கும் வர்க்க பாசத்திற்கும் உரிய பலர் இன்று ஐ.தே.கட்சியில் உயிருடன் இல்லை அல்லது ஓய்ந்து அலுத்த நிலையில் காணப்படுகின்றனர். இத்தகைய பலவீனமான நிலையில் அதனுடன் இருந்து தனது எதிர்காலத்தை சிறப்புடைய தாக்க முடியாது என்பதை

மிகுந்த புத்திக் கூர்மையுடன் கணக்கிட்டே தொண்டமான் புதிய ஆட்சிப் பக்கம் சென்றுள்ளார். அதாவது தொண்டமானுக்கு எண்பது வயது கழிந்து விட்டது. அவர் இறுதி ஆண்டுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். தான் அமர்ந்திருந்த ஆசனத்தையும் அனுபவித்த சுக காரியங்களையும் தனது வாரிசுக்கு தக்கபடி விட்டுச் செல்ல வேண்டும் என்பது அவரது பேரவா? அவரது வாரிசாக வளர்க்கப்படுபவர் அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமானாவார். எனவே அந்த இலக்கை நோக்கிச் செல்வதற்கு பழைய கட்சியையும் பழைய நண்பர்களையும் நம்பிப் பயன் இல்லை. ஏனெனில் அவர்கள் பழைய

நிலைக்கு வர அடுத்த பத்தாண்டுகளுக்கு மேல் செல்லக் கூடும். சிலவேளை இருபது ஆண்டுகள் வரை கூடக் காத்திருக்க வேண்டி வரும். எனவே அதற்கிடையில் புதிய அரசாங்கத்தில் புதியவர்களை ஓரளவு இளம் தலைமுறையினரை கையில் போட்டு அறிமுகத்தை உருவாக்கி நட்பை வளர்த்து விட்டால் பின்பு தனது இடத்தைப் பேரனார் என்பவர் தக்கபடி முன்கொண்டு செல்வார் என்பது மதிநுட்பம் கொண்ட தொண்மானின் தூர

நோக்காகும். எனவே விளைவு எதனையும் பொருட்படுத்தாது அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

தொண்டமானின் உள்ளார்ந்த நோக்கும் போக்கும் மேற்கூறப்பட்டதாக இருப்பினும் பொது சன முன்னணியில் இணைந்து கொண்ட செயலை வரவேற்க வேண்டும். ஏனெனில் அவரது இணைவு யாவற்றுக்கும் மேலாக நாட்டை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு முக்கியமாக இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் மலையக மக்களின் நீண்டகால ஜீவாதாரப் பிரச்சினைகளின் வென்றெடுத்தலுக்கும் உதவக் கூடியதாக அமைந்தால் எல்லோரும் மகிழ்ச்சி கொள்வார்கள் அல்லாது தன்னிடம் உள்ள வாக்கு வங்கியைக் காட்டி தனது சொந்தக் காரியங்களுடன் நின்று கொள்ள முற்பட்டால் அதனால் எவ்விதப் பிரயோசனமும் இருக்க மாட்டாது. அதே போன்று பொதுசன முன்னணி ஆட்சியானது தொண்டமானை மட்டும் திருப்திப்படுத்திக் கொண்டு கடந்த அரசுபோல் மலையகத் தோட்டத் தொழிலாளி வர்க்கத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடாத்த முற்பட்டால் அது பெரும் துரோகத்தனமானதாகவே அமைந்து விடும்.

மேலும் தொண்டமானின் முடிவு சில இடதுசாரி வட்டாரங்களில் ஐயுறவையும் கிளப்பியுள்ளது. இதுவரை ஐ.தே.கட்சியுடன் நின்றவர் திடீரென இந்தப் பக்கம் வந்திருக்கிறார். நடு உழவில் நந்தை முறிப்பது போல் நெருக்கடிகாலத்தில் ஆட்சியை விட்டு விலகி காலை வாரி விடுவாரோ என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இவற்றுக்கும் மேலான மற்றொரு ஊகமும் பேசப்படுகிறது.

அதாவது இந்த ஆளும் வர்க்கத் தொடர்புடைய தொண்டமான் மூலம் இந்தியச் செல்வாக்கு புதிய ஆட்சிக்கும் புகுத்தப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. இதனை மறுப்போரும் உள்ளனர். அவர் இந்திய விசுவாசத்தை விட அமெரிக்க விசுவாசம் கூடியவராகையால் இந்தியச் செல்வாக்கை விட அமெரிக்கச் செல்வாக்கை புதிய ஆட்சியின் மத்தியில் செலுத்தி நிற்கக் கூடியவர் என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு தொண்டமான் அரசாங்கத்தில் அமைச்சராகிக் கொண்டு தனது பக்கத்தை மாற்றிக் கொண்டதும் பலவாறு பேசிக் கொள்ளப்படும் போது

அவற்றில் பல்வேறு உண்மைகள் தொக்கி நிற்பது மறுக்கப்பட முடியாததாகும். தொண்டமான் அரசுடன் இணைந்தது அரசுக்குப் பலம். இது எவ்வகையிலும் எதிர்வினையாற்ற இடமளிக்கக் கூடாது. அதாவது சிறுபான்மையினத் தலைவர்கள் யாவரும் எம்முடன் உள்ளனர் என்ற உள்ளார்ந்த மமதையில் புதிய ஆட்சியினர் பிரச்சினைகளைத் தீர்க்கும் பாதையிலும் முயற்சிகளைத் தீர்க்கும் பாதையிலும் முயற்சியிலும் குறுகிய நிலைப்பாட்டில்

நடந்து விடக் கூடாது. பேச வேண்டிய சக்திகளோடும் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளோடும் சம்மந்தப்பட்ட மக்களின் அடிப்படை அபிலாசைகளை மறந்து இத்தகைய தலைவர்களுடன் மட்டும் அரசாங்கமும் அதன் தலைவர்களும் தம்மை மட்டுப்படுத்தி விடக்கூடாது. எனவே பரந்த நோக்கிலும் போக்கிலும் ஆரோக்கியமான வழிகளிலும் இனப்பிரச்சினை மலையகப் பிர்ச்சினை ஆகியவற்றுக்குத் தீர்வு காணப்படுவதற்கு தொண்டமானின் அரசாங்கப் பிரவேசமும் அமைச்சர் பதவியும் உதவுமானால் மக்கள் வரவேற்பார்கள். அல்லாதுவிடின் மக்கள் எதிர்ப்பார்கள்.

## யூ.என்.பி கழுகுகளின் கையில்

கழுகு சின்னத்தைக் கொண்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரே யூ.என்.பியைக் கைப்பற்றி விட்டனர். அதனாலேயே மரணவீட்டிலிருந்தே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்டுள்ளனர். அவர்கள் பிணந்தின்னிக் கழுகுகள். அவர்களின் கைகளுக்கு யூ.என்.பி. போய் விட்டது என்று ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ஏ.ஜே.ரணசிங்க தொலைக்காட்சியில் அக்டோபர் 30 ஆம் திகதி நடத்திய பிரசாரப் பேச்சில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது கழுகுகள் (ராஜாளியா) திட்டமிட்டபடி யூ.என்.பியை கைப்பற்றி விட்டன. மரணவீட்டிற்குள்ளிருந்த விதவைப் பெண்ணை ஜனாதிபதி அபேட்சகராக்கியது யார்? சிறந்த கணவானான ரணில் விக்கிரமசிங்ஹவை தாக்கியதற்கும், ரூபவாஹினி (வெகுஜனத் தொடர்பு) உறுப்பினர்களை தாக்கியதற்கும் பின்னணியில் இருந்தது யார்? காமினியின் கொலையை அடுத்து இனவாதத்தைத் தூண்டிக் கொண்டிருப்பது யார்?

எல்லாம் அந்த நிர்வாணப் படமெடுத்த பல பெண்களை இம்சைப்படுத்திய 'கலாநிதி' தான். இலங்கைப் பிரஜையாகவுமில்லாத கலாநிதியின் சூட்சியிலிருந்து யூ.என்.பி அங்கத்தினர்கள் யூ.என்.பியைப் பாதுகாக்க முன்வர வேண்டும். காடைத்தனத்திலிருந்து யூ.என்.பியை காப்பாற்ற வேண்டும்.

படிப்பகம்

## கட்சிப் பத்திரிகையல்ல

'புதிய பூமி' பொது ஜன ஐக்கிய முன்னணியின் உத்தியோக பூர்வ செய்திப் பத்திரிகையோ அல்லது அதனால் வழிநடத்தப்படும் பத்திரிகையோ அல்ல. அதே வேளை எந்தவித அரசியற் கடமையும் இல்லாமல் கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் ஆதரிப்பதோ, எல்லாவற்றையும் எந்நேரமும் விமர்சனம் செய்வதோ 'புதிய பூமியின்' வேலையுமல்ல.

சமத்துவமான, நீதியான, நியாயமான ஒரு சமூகத்தை உருவாக்கி கட்டிவளர்க்க வேண்டியது என்பது பிரதான அரசியற் கடமையாகும். அந்த பாதையில் ஒரு அரசியல் பத்திரிகையாக அல்லது அக்கடமையை முன்னெடுப்பதற்கான அரசியல் கலாசாரத்தை வளர்க்கும் பொறுப்பை 'புதிய பூமி' கொண்டிருக்கின்றது.

மேற்படி கடமையிலும், பொறுப்பிலும் குறுக்கிடும் அல்லது, முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்களை விமர்சனம் செய்யும் உரிமையை கொண்டிருக்கின்றது. அதேவேளை மேற்படி கடமையை செய்வதற்கு ஊக்குவிப்பாக முனைப்பாக இருக்கும் விடயங்களை ஆதரிப்பதும் இன்றியமையாத தேவையாகவே கருதுகிறது.

கடந்த் 17 வருட ஜனநாயக விரோத, மக்கள் விரோத பேரினவாத யூ. என். பிக்கு முடிவு கட்ட வேண்டிய அரசியல் தெரிவை மக்கள் முன்னெடுக்க வேண்டும் என்பதில் 'புதிய பூமி' தொடர்ச்சியாக அக்கறை கொன்டிருக்கிறது: யூ. என். பிக்கு மாற்றாக ஜனநாயக அரசாங்கம் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும் என்பதும் அந்த அக்கறையில் ஒரு பகுதியாகும்

குறிப்பிட்ட ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி மாற்றுக் கருத்துக்களை கொண்ட பலரும் 'புதிய பூமிக்கு' எழுதிவருகின்றனர். புதிய சமூகமொன்றை படைப்பதற்கான ஆரோக்கியமான அரசியற் கருத்துக் களமாக 'புதிய பூமி' விளங்கும்.

எனவே சில வாசகர்கள் அபிப்பிராயம் தெரிவித்து எழுதியிருப்பது போன்று 'புதிய பூமி' பொது ஜன ஐக்கிய முன்னணியின் உத்தியோகபூர்வ செய்திப்பத்திரிகை அல்ல.

ஆசிரியர் குழு.

## மலையக மக்களின் ஆதரவு

மா, பாண், லாம்பெண்ணெய், பருப்பு என்பவற்றின் விலை குறைப்பு தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் சிறப்பாக வழங்கப்பட்ட சலுகை அல்ல என்றாலும் அதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மை ஏதும் ஏற்படவில்லை என்று தொண்டமானும் இ.தொ.காவும் கூறுவது சரியானதல்ல.

வின்லக் குறைப்புகளால் சராசரி தோட்டத் தொழிலாளர் குடும்பமொன்றின் மாதாந்த செலவில் ஆகக்குறைந்தது ஐந்நூறு ரூபாய் குறைந்துள்ளதாக அறியமுடிகின்றது. தோட்டத் தொழிலாளர்கள் பலரை சந்தித்ததன் மூலம் இதனை அறியமுடிந்தது.

அதனைவிட இவ்வருடம் தீபாவளி முற்பணமாக ஒரு தொழிலாளிக்கு ஆயிரம் ரூபாய் வழங்க தோட்ட நிர்வாகங்கள் அரசாங்கத்தால் கேட்கப்பட்டுள்ளன. வழமையாக ஐந்நூறு அல்லது அதற்கு குறைவாகவே தீபாவளி முற்பணம் கிடைத்தது.

இதனாலும் தோட்டத் தொழிலாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை வரவேற்கின்றனர்.

1970-77பஞ்சம் மீண்டும் வந்துவிடும் என்று பயத்தாலும் அக்கால சிங்கள காடையர்களினால் ஆங்காங்கு தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்க தயக்கம் காட்டினர்.

பொ.ஐ.ஐ.முன்னணி

வந்தவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதாலும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் சந்திரிகா மலையக மக்களின் உரிமைகள் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டமையாலும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இன்றைய புதிய சூழ்நிலையைப் பயன்படுத்தி முன்னர் தயக்கம் காட்டிய, பொ.ஜ.ஐ.முன்னணிக்கு எதிராக திட்டித் தீர்த்த தொழிற்சங்கங்கள் கூட பொ.ஜ.ஐ.முன்னணியை ஆதரித்து ஜனாதிபதி தேர்தல் பிரசார வேலைகளை செய்து வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.கா. நடுநிலைமை வகிக்கப்போவதாக கூறிய தொண்டமான் காமினி திசாநாயக்க கொல்லப்பட்ட பின்னர் பொ.ஜ.ஐ. முன்னணியின் அமைச்சராகியுள்ளார்.

மலையகத்தில் அமைப்புகள் என்று சொல்லப்படுகின்ற இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, செங்கொடிச் சங்கம், செல்லச்சாமியின் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகளும் பொ.ஜ.ஐ.முன்னணியை ஆதரிக்கின்றன.

தொண்டமான் அமைச்சராகிய பிறகு காமினியை ஆதரித்து ஏற்கனவே வேலை செய்த இ.தொ.கா. எம்.பிக்கள் மௌனமாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

www.padippakam.com

புதியபூமி

47, மூன்றாம் மாடி
கொழும்பு சென்றல் சுப்பர் மாக்கற் கொம்ளெக்ஸ்
கொழும்பு-11



## அடுத்த ஜனாதிபதியாக யார் வரவேண்டும்?

எதிர்வரும் ஒன்பதாம் திகதி முன்குறித்தபடி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. நான்கு கட்சிகள் இரண்டு சுயேட்சைகள் உட்பட ஆறு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆட்சியில் அமர்ந்துள்ள பொது சன முன்னணிக்கும் எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமிடையிலேயே போட்டி நிலவுகின்றது. பொதுசன முன்னணி சார்பில் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முன்னைய வேட்பாளரான காமினி திசநாயக்காவின் மனைவி சிறிமா திசநாயக்காவும் போட்டிக்கு நிற்கின்றனர். எனவே பிரதான போட்டியாளர்களின் கொள்கை நிலைப்பாட்டினை சீர்தூக்கிப் பார்த்து மக்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

பொதுசன முன்னணியின் வேட்பாளர் சந்திரிகா குமாரணதுங்காவிற்கு அரசியல் புதியதொன்றல்ல. அதே வேளை ஆட்சியதிகாரம் புதியதொன்றாக இருந்த போதிலும் பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையுடன் ஆட்சியை நடாத்திச் செல்கிறார்.

நெருக்கடி மிகுந்த சமகால இலங்கை அரசியலில் முற்போக்கு சிந்தனையும், அரசியல் ஆளுமையும், துணிச்சலும், நிதானமும் அவரிடம் காணப்படுகின்றது. அவற்றுக்குரிய அடிப்படையாக அவர் ஓரளவிற்கு பரந்து பட்ட மக்களின் உணர்வுகளைத் தக்கபடி புரிந்து கொண்டவராகக் காணப்படுகின்றார். இருப்பினும் இந்நிலையினை எவ்வளவு காலத்திற்கு உறுதியாகப் பற்றி நிற்கப் போகின்றார் என்பதிலேயே அவரது எதிர்காலம் தங்கியுள்ளது.

சந்திரிகா தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் பாராளுமன்றத் தேர்தல் வாக்குறுதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றி வைக்கவும், கடந்த பதினேழு வருட காலத்தின் எதேச்சதிகார ஆட்சி முறைக்கு வழிவகுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமினை ஒழித்துக் கொள்வதற்கும் தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும்படி கேட்டு வருகின்றார். தான் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை எவ்வாறு துணிச்சலுடன் நிறைவேற்றி வருவதற்கு கடந்த இரண்டுமாத கால ஆட்சியின் நடைமுறைகளை மக்கள் கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனநாயக மனித உரிமைகளை மீட்பதிலும், லஞ்சம், ஊழலை வெளிக்கொண்டுவருவதிலும், மக்களது வாழ்க்கைச் சுமைகளை குறைப்பதிலும் அவர் உடனடிக்கவனம் செலுத்துகின்றார். இது தொடர்ந்தும் சாதகமான வழிகளில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர வெற்றிக்கான குறுகிய நோக்காக அமையக் கூடாது. யாவற்றுக்கும் மேலாக தேசிய இனப் பிரச்சினைக்கு ராணுவத்தீர்வு உகந்த வழி அல்ல என்பதை சிங்கள மக்கள் முன் துணிச்சலுடன் பகிரங்கமாக முன்வைத்து பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கும் அங்கீகாரம் பெற்ற அரசியல் தலைவராக இருப்பது மட்டுமன்றி அதற்கான ஆரம்ப முயற்சிகளில் நம்பிக்கையுடன் செயல்பட்டும் வருகின்றார்.

அதே வேளை ஐக்கிய தேசிய கட்சி தனது முன்னைய வேட்பாளரான காமினி திசாநாயக்காவை இழந்த நிலையில் தமக்கு தகுதியான ஒருவரைத் தெரிவு செய்யமுடியாத உள் வீட்டு சச்சரவின் மத்தியில் காமினியின் பாரியாரைத் தேர்வு செய்துள்ளது. தனது கணவன் கோரமாகக் கொல்லப்பட்ட அனுதாப உணர்வலைகளின் அடிப்படையில் தமக்கு வாக்களிக்கும்படி கேட்பதைத் தவிர அதற்கு மேலால் புதிதாக முன்வைப்பதற்கு அவரிடம் எதுவுமே இல்லை. வெறுமனே அனுதாபத்திற்கு வாக்களிப்பதில் அர்த்தம் ஏதும் இருக்க முடியாது. அப்படியாயினும் கூட அவ் அனுதாபத்திற்குரியவரான காமினியும் அவரது கட்சியும் கடந்த காலத்தில் ஆற்றிய கொள்கையும் நடைமுறையும் யாது என்றே நோக்குதல் வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர். தலைமையில் ஆரம்பித்து வைத்த ஏதேச்சதிகார நடைமுறைகளையும், பிரேமதாசா நிறைவேற்றிக் கொண்ட ஜனநாயக விரோத மனித உரிமை மீறல்களையும் நிராகரித்த மனிதராக காமினி இருக்கவில்லை. அவற்றின் முக்கிய பங்குதாரியாகவே அவர் இருந்து வந்தார். புதிய ஆட்சியில் பழைய புதைகுழிகள் தோண்டப்படுவதையும் ல்ஞ்ச ஊழல்கள் வெளிப்படுத்தப்படுவதையும் எதிர்த்து நின்றதன் மூலம் தானும் ஐக்கிய தேசியக் கட்சியும் யார் என்பதை வெளிப்படுத்தி நின்றமை நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும். இவை மட்டுமன்றி இனப்பிரச்சினையின் தீர்வுக்கு பழைய பாதையே தொடரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வந்தார் என்பதும் கவனத்திற்குரியதாகும். இத்தகைய ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாகவும் அத்தகைய காமினியின் மீதான அனுதாபமாகவும் திருமதி சிறிமா திசநாயக்கா மக்களிடம் வாக்கு கேட்பதனால் அதற்குப் பதில் எங்கள் வாக்கு உங்களுக்கு இல்லை என்பதாக இருப்பதே நியாயமானதாகும்.

எனவே கடந்த பதினேழு ஆண்டு காலத்தின் ஒவ்வொரு இருண்ட பக்கங்களையும் அவற்றின் விளைவுகளையும் பொறுப்புடன் சீர்தூக்கிப் பார்த்து புதிய ஆட்சியினது உறுதிப்பாட்டிற்கும் அதன் புதிய முன் முயற்சிகளுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

# இந்தியா பங்களிக்குமா பங்கமிழைக்குமா?

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை இன்று புதியதோர் கட்டத்தினுள் பிரவேசித்துள்ளது. கடந்த பதினேழு ஆண்டுகளாக இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ராணுவ வழிமுறைகளை முன்தள்ளி நாட்டின் வடக்கு கிழக்கை நிரந்தரமான யுத்த பூமியாக்கி வந்தது ஐக்கிய தேசியக் கட்சி. பேரினவாத வெறியும், பெரு முதலாளித்துவ நிலையும், பாசிச நடைமுறையும் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட ஆட்சிக்கு கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள். அதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையும், அரசியல் தீர்வுமே சரியான மார்க்கம் எனக் கொள்கை முன்வைத்த பொதுஜன முன்னணியையும் அதன் தலைவியான திருமதி. சந்திரிகா குமாரணதுங்காவையும் மக்கள் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தி விட்டார்கள். பதவிக்கு வந்த அரசும் அதன் பிரதமரான சந்திரிகாவும் தமது தேர்தல் வாக்குறுதிக்கு இணங்க, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணும் முன் முயற்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.



வெளியிட்ட கருத்துக்கள் நமது சிந்தனையை தொட்டு நிற்கின்றன. புதிய ஆட்சியின் வரவை இந்தியா மனமார்ந்த விருப்பத்துடன் ஆசீர்வதிக்கவில்லை என்று கூறப்படுவதுடன் புலிகள் இயக்கத்துடன் புதிய ஆட்சியினர் பேச்சுவார்த்தை நடாத்துவதை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தியாவின் மனம் கவர்ந்த காமினி திஸநாயக்கா தலைமையிலான யூ.என்.பியை எப்படியும் பதவியில் அமர்த்துவ

திய ஆளும் வர்க்கத்திற்குமிடையில் வரைந்து கொள்வது அவசியமாகும். இதில் ஒருவருக்கு தெளிவு இல்லாதுவிடின் இந்தியாவைப் பற்றிய பார்வையில் வழிதவறிவிடக்கூடும். இந்தியா வரலாற்று அடிப்படையில் நீண்ட மனித நாகரீக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வந்துள்ள நாடாகும். அதற்கு தொன்மை வாய்ந்த வரலாற்று ஆதாரங்கள் சிறப்பினை வழங்கி நிற்கின்றன என்பது உண்மையே. அத்துடன் உயர்ந்து செல்லும் சனத்தொகையும் பரந்த நிலப்பரப்பும் பல்வேறு கனிவளங்களும் அந் நாட்டின் முக்கியத்துவத்தின் அடிப்படைகளாகும். இவை மட்டுமன்றி தொன்மை வாய்ந்த தத்துவஞான மரபும் அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியும் கூட இந்தியப் பெருமைக்கு அணி சேர்ப்பதாக உள்ளது. இவற்றின் அடிப்படையில் இந்திய தேசிய அகங்காரம் என்பது இந்திய ஆளும் வர்க்கத்தினரிடம் வழிவழியாக வளர்ந்து வந்துள்ள ஒன்றாக இருந்து வருகின்றது. இந்திய தேசிய அகங்காரம் என்பது இந்து தேசிய அகங்காரமாகவும் இறுகிப் போய்க் காணப்படுகின்றது. இவ் உட்கிடக்கையைக் கொண்டே

பிரதமர் சந்திரிகாவும் அவருடைய அரசும், இன்றைய அரசியல் யதார்த்தத்தை நன்கு விளங்கிக் கொண்டே செயல்பட முனைந்து நிற்கின்றனர். அதனாலேயே முன்னைய ஆட்சியினரால் பயங்கரவாதிகள் என வர்ணிக்கப்பட்ட புலிகள் இயக்கத்துடன் எவ்வித நிபந்தனையும் இன்றித் திறந்த மனதுடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்துள்ளனர். இதனையே நாம் புதிய கட்டம், புதிய சூழல் எனக் காண்கின்றோம். இரு தரப்பாரும் உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேச முற்படாது தேச நலன் மக்கள் நலன் என்னும் அடிப்படையை முதன்மைப்படுத்தி பேச்சுவார்த்தையை முன்னெடுத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றினை எய்த வேண்டும் என்பதே ஏகப் பெரும்பாலான இலங்கை மக்களின் விருப்பமாகும். அதனையே பல்வேறு மக்கள் இயக்கங்கள் 'யுத்தம் வேண்டாம் அரசியல் தீர்வு வேண்டும்' என்பதன் மூலமாக வெளிப்படுத்தி வருகின்றன. ஒட்டு மொத்தத்தில் இன்று சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் அனைவர் மத்தியிலும் சமாதானக் காற்று வேகமாக வீசி வருவதனைக் காண முடிகின்றது. இது என்றுமில்லாத புதிய சூழல் என்பதை எவரும் மறுக்க மாட்டார் என்பது மட்டுமன்றி பொது அக்கறை கொண்ட சராசரி மனிதர் ஒவ்வொருவரும் இச் சமாதான சூழலை ஆரோக்கியமாக முன் தள்ளி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண சகல முயற்சிகளையும் செய்வது அவசியமாகும்.

இத்தகைய புதிய சூழலிலேயே இந்தியாவின் நிலைப்பாட்டின் மீதும் அதன் நடத்தைகள் மீதும் நமது கவனத்தைத் திருப்பிப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் தொ[illegible]ங்கள்



தற்கு மறைமுக வழிகளில் இந்தியா எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எதனைக் கொண்டும் மறைத்து விட முடியாது. அந்த முயற்சி இயலாமல் போனதினால் பதவிக்கு வந்த புதிய ஆட்சியில் தனது செல்வாக்கினைச் செலுத்தி தன் சொல்லைத் தட்டாத நிலைக்கு ஆளாக்க எத்தனங்கள் பல செய்யப்பட்டன. நேரடியாகவே இந்தியப் பிரதமரின் விஷேசப் பிரதிநிதி இங்கு வந்து பிரதமரைச் சந்தித்தது முதல் பல இடைத்தரகர்கள் இப்பொழுதும் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்க அல்லது இடைமுறிக்க முயலுவது வரை பல திரைமறைவு முயற்சிகள் இடம் பெறுவதாகவே பேசிக் கொள்ளப்படுகின்றது. இதனாலேயே இந்தியா நமது நண்பனா? அல்லது பகைவனா? என்னும் நியாயமான கேள்வி நம்மவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தியாவின் நிலையினை நோக்கும் போது முதலிலேயே ஒரு தெளிவான எல்லைக் கோட்டினை இந்திய மக்களுக்கும் இந்

அகண்ட இந்து பாரதம் அல்லது 'பிராந்திய மேலாதிக்கப் பாரதம்' போன்ற கருத்து நிலைக்கு இந்திய ஆளும் வர்க்கத்தினர் வடிவமைப்புக் கொடுத்து வந்துள்ளனர். அண்டை அயல் நாடுகளை மிரட்டி அச்சுறுத்த தலைப்பட்டனர். தமது கைப்பிடிக்குள் வைத்திருக்கப் பலபத்து தந்திரங்களைக் கையாண்டனர். தென்

**வெகுஜனன்**

ஆசிய நாடுகளை தனது சொற்படி நடக்கச் செய்வதையே இந்திய ஆளும் வர்க்கம் குறியாகக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளது. தன்னைச் சுற்றியுள்ள ஆறு நாடுகளான நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், பங்களாதேசம், இலங்கை, மாலைதீவு ஆகியவற்றை தனது விரல் அசைவுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தி நிற்

படிப்பகம்

www.padippakam.com



# மக்களின் அதியுயர் உரிமை

-நமது அரசியல் நிருபர்

''ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றம் கட்டுப்படுத்த முடியும். பாராளுமன்ற அதிகாரம் ஒரு கட்சியிடமும் ஜனாதிபதி அதிகாரம் இன்னொரு கட்சியிடமும் இருந்தால் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள முடியாது. நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதனது பாராளுமன்ற அதிகாரத்தைக் கொண்டு என்னைக் கட்டுப்படுத்த முடியும்.

அமெரிக்காவில் ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் பெரும்பாலானோர் இன்னொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பம் இருந்திருக்கிறது. அக்காலத்தில் அமெரிக்க அரசாங்கத்தில் எவ்வித குழப்பநிலைமையும் ஏற்படவில்லை. என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தால் நான் பிரதமர் சந்திரிகாவுடன் ஒத்துழைப்பேன்'' என்று ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான 'காலஞ்சென்ற காமினி திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார். மேற்குறிப்பிட்டவாறான 'புத்திஜீவித்தனமான வாதத்தை மட்டுமே முன்வைக்க இயலுமானவராகவே அவர் இருந்தார்.

''ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க போவதாக பொ.ஜ.ஐ. முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தை அமைத்தவுடன் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலமில்லாதபடியால் அதை ஒழிக்கமுடியவில்லை, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது மட்டுமன்றி பல்லினமக்கள் வாழும் எமது நாட்டின் ஏற்ற புதிய அரசியலமைப்பை ஜனாதிபதி தேர்தலுக்கு முன் தயாரிப்பதற்கு அவகாசம் இருக்கவில்லை. எனவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டியிருக்கிறது.'' என்று பொ.ஜ.ஐ.முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அடுத்த வருடம் யூலை மாதம் 15ம் திகதியுடன் ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கு முடிவு கட்டப் போவதாகவும் அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

(பாராளுமன்ற பதவியேற்று ஒரு வருட காலத்திற்குள் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தலை நடத்த முடியாது என்று (1978) அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது) இந்த வாக்குறுதியை அடுத்து இலங்கை முற்போக்கு முன்னணி வேட்பாளர் (ஜே.வி.பி) கலப்பதி போட்டியிலிருந்து விலகிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கலப்பதி ஜனாதிபதி தேர்தல் போட்டியிடுவது ஜனாதிபதி முறையை ஒழிக்கவே என்று கூறி வந்தார். சந்திரிகா அம்முறையை ஒழிப்பதாக வாக்குறுதி கொடுத்ததும் அவர் போட்டியிலிருந்து விலகினார்.

கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக விரோத, மனித உரிமைகள் மறுப்பு, படுகொலை சம்பவங்களுக்கும் அதிகாரம் கூடிய ஜனாதிபதி ஆட்சி முறைமையே காரணம். அதனால் அம்முறைமையை ஒழிக்க வேண்டிய தேவை இந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிக்கப்போவதாக காமினி திசாநாயக்க வாக்குறுதி அளிக்கவில்லை. அவர் ஜனாதிபதி ஆட்சி முறைமையை பற்றி வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறுபட்ட கருத்தை கொண்டிருந்தார் என்பதை அறியமுடிகிறது. அவரது கொலைக்கு பின்னர் வேட்பாளரான அவரது மனைவியும் கூட ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாகவும் கூறவில்லை. அவர் காமினியின் கொள்கைகளை முன்னெடுக்கப் போவதாகவே கூறுகிறார்.



ஜே.ஆரினால் ஆக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறைமையை அறிமுகம் செய்த 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை காமினி திசாநாயக்க ஆரம்பத்திலிருந்து போற்றியே வந்தார். 1988 ஆம் ஆண்டில் லிபரல் ஜனநாயக சபை நடத்திய ஒரு கருத்தரங்கில் ஜனாதிபதி ஆட்சிமுறைமையை புகழ்ந்தே பேசினார். 1978 அரசியலமைப்பில் ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்த 'இம்பீச்மென்ற்' பிரேரணை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்பின் கீழ் பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த அரசியலமைப்பை குறை கூற முடியாது'' என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட 'இம்பீச்மென்ற்' பிரேரணை தோல்வியடைந்தது மட்டுமன்றி ஐ.தே.கட்சியிலிருந்து காமினி, லலித் போன்றோர் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் ஜ.ஐ.தேசிய முன்னணியை அமைத்து ஜனாதிபதி முறையை ஒழிப்பதையே அதன் பிரதான கொள்கையாக கொண்டிருப்பதாக கூறினர்.

லலித், பிரேமதாஸ ஆகியோரின் கொலைகளுக்கு பிறகு ஐ.தே.கட்சியில் கவரக்கூடிய ஜனாதிபதி அபேட்சகர் ஒருவர் இல்லை என்பதால் (நாட்டின் தலைவராக வந்து விட வேண்டும் என்ற சுய குறிக்கோளை கொண்ட) காமினி அதனை நோக்கி தன்னை வளர்த்துக் கொண்டார்.

மத்திய மாகாணசபையில் ஐ.ஐ.தே.மு.யின் உறுப்பினராக இருந்த காமினி ஐ.தே.கட்சியின் மாகாணசபை அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஈடுபட்டார். அதன் பின்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கு விசுவாசமானவராக மாறி ஐ.தே.கட்சியில் மீண்டும் அங்கத்தினராகி ரணில், சிறிசேன குரே ஆகியோரை பின்னுக்கு தள்ளிவிட்டு ஜனாதிபதி அபேட்சகரானார்.

ஐ.ஐ.தே.முன்னணியை ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிப்பதற்காகவே' அமைத்ததாக காமினி கூறியபோதும் ஐ.தே. கட்சியில் சேர்ந்த பிறகு அக் கொள்கையை கைவிட்டார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ஆட்சி முறைமை புகழப்பட்டிருந்தது. ஜனாதிபதி ஆட்சிமுறைமையை தொடர்ந்து ஐ.தே.கட்சி பேணும் என்றும் தேவையேற்படின் சில மாற்றங்கள் செய்யப்பட்டாலும் அம்முறைமை தொடர்ந்திருக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது.

காமினி ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதை உறுதியான கொள்கையாக கொண்டிருந்தால் ஐ.தே.கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை சேர்ந்திருக்க முடியும். காமினியுடன் மிகவும் நெருக்கமானவர்களே அவ் விஞ்ஞாபனத்தை வரைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே. கட்சி தோல்வியடைந்தவுடன் ஜனாதிபதி முறைமை பற்றிய அவரது கருத்தில் தலைகீழான மாற்றமொன்று ஏற்பட்டதை காண முடிந்தது. அதாவது ஜனாதிபதி முறைமையை ஒழிக்க பொ.ஐ.முன்னணிக்கு ஐ.தே. கட்சி ஆதரவளிக்கும் என்று கடந்த செப்டெம்பர் மாதம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி முறையை ஒழிக்க பொ.ஜ.ஐ.முன்னணி எடுக்கும் நடவடிக்கைக்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலத்தை கொடுத்து உதவ ஐ.தே.கட்சி தயார் என்று அவர் குறிப்பிட்டார்.

எனினும் அவரின் நேர்மையில் சந்தேகப்பட்டதாலும் ஐ.தே.கட்சியில் எல்லோரும் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதை ஆதரிப்பார்களா என்பது சந்தேகமாகி இருந்தபடியாலும் பொ.ஜ.ஐ.முன்னணி அவரின் விருப்பத்தை பொருட்டாக கொள்ளவில்லை. பொ.ஜ.ஐ.மு. ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது மட்டுமன்றி வேறு பல மாற்றங்களையும் கொண்டுவர விரும்பியது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்தபின்னர் காமினி குறிப்பிட்டு 'இம்பீச்மென்ற்' பிரேரணையால் ஜனாதிபதியை கட்டுப்படுத்துவது இலகுவான காரியமன்று. அதனை அவரே இந்நாட்டு மக்களுக்கு நிரூபித்துள்ளார். ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிராக 'இம்பீச்மென்ற்' பிரேரணையை கொண்டு வந்து தோல்வி கண்ட பெருமை காமினியையே சாரும்.

ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும் மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் இன்னொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்படுவதால் அமெரிக்காவில் பிரச்சினை ஏற்படாதிருக்கலாம். அமெரிக்காவில் இருக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் கொள்கையளவில் (ஒரு சில நடைமுறைகளை விட) பாரிய முரண்பாடுகளை கொண்டவையல்ல. அதனாலும் அது ஒரு முன்னேறிய வல்லரசு என்பதாலும் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதிருக்கலாம்.

ஐ.தே.கட்சியும் பொ.ஜ.ஐ.முன்னணியும் கொள்கையளவில் பாரிய முரண்பாடுகளை கொண்டுள்ளன. இங்கு ஜனாதிபதியின் அதிகாரம் ஒரு கட்சியிடமும் பாராளுமன்ற ஆட்சி இன்னொரு கட்சியிடமும் இருந்தால் சுமூகமான ஆட்சி நடைபெறாது. தேசிய இனப்பிரச்சினை போன்ற உடனடியாக தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களில் இரண்டு கட்சிகளும் மாறுபட்ட போக்கினையுடையன. அரசியல் தீர்வை காண முற்படும் பொ.ஜ.ஐ.முன்னணியின் முயற்சிக்கு காமினி ஜனாதிபதியாக வந்தால் முட்டுக்கட்டையாக இருப்பார்.



அமைச்சரவையின் தலைவராகவும், ஆயுதப்படையின் தலைவராகவும் இருக்கும் ஜனாதிபதி பதவி ஐ.தே.கட்சியிடம் இருந்திருந்தால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது என்பது 'குதிரைக் கொம்பாகவே' இருக்கும்.

பொ.ஜ.ஐ.முன்னணி அரச பொறுப்பேற்றவுடன் விசாரணை ஆணைக்குழுக்களை நியமிக்கும்படி ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவை கேட்டதையும், அவர் மறுத்ததையும் சிறந்த முன்னறிவாக கொள்ளமுடியும். சமாதான பேச்சுவார்த்தை ஆரோக்கியமாக நடத்த யுத்தநிறுத்தம் அவசியம் என்பதை பொ.ஜ.ஐ.முன்னணி ஏற்றுக் கொண்டபோதும் அதை நடைமுறைப்படுத்த ஐ.தே.கட்சியை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருப்பது முக்கிய இடைஞ்சலாக இருக்கிறது.

காமினி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அவர் பிரதமர் சந்திரிகாவுடன் எப்படி ஒத்துழைப்பார் என்பதற்கு ஒரு பலப்பரீட்சை அவசியமில்லை. பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னாக பொ.ஜ.ஐ.முன்னணியை ஆட்சியமைக்கவிடாது தடுக்க காமினி எடுத்துக் கொண்ட முயற்சிகளை இந்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பொ.ஜ.ஐ.முன்னணியை ஆட்சியமைக்க விடாது ஐ.தே.கட்சிக்கு பெரும்பான்மை பலத்தை தேடிக்கொள்ள சிறுபான்மை கட்சிகளுடன் பேரம் பேசுவதில் காமினியே முழுமூச்சாக ஈடுபட்டார். இரண்டு இராணுவ சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் செய்திகள் வெளிவந்தன.

இந்த அரசியலமைப்பின்படி பாராளுமன்றம் ஜனாதிபதியுடன் ஒத்துழைக்க தவறுமாயின் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தையும் ஜனாதிபதி கொண்டிருக்கிறார். எனவே பொ.ஜ.ஐ.முன்னணிக்கு மாறான ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழித்து பல்லினமக்கள் வாழும் இந்நாட்டிற்கு ஏற்ற, ஜனநாயக மனித உரிமைகளை உத்தரவாதம் செய்யும் ஒரு அரசியலமைப்பை படைக்க இந்நாட்டு மக்கள் அதியுயர் உரிமையை கொண்டுள்ளனர். அந்த உரிமையை கைவிடவோ, யாரிடமும் அடைவு வைக்கவோ இந்நாட்டு மக்கள் தயாராக இல்லை.

## ஜே.ஆர் எந்தப்பக்கம்

ஐ.தே.கட்சியில் தற்போது பிரதானமாக இரண்டாக பிளவுபட்டுள்ளது ஒன்று காமினி பிரிவு, மற்றயது ரணில் பிரிவு.

இதில் எந்தப்பிரிவுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆதரவு என்பது இப்போது ஐ.தே.கட்சி வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவரது மருமகனான ரணிலில் பக்கமா அல்லது காமினி குழுவினரின் பக்கமா?

அவரது மகன் ரவி ஜயவர்த்தன காமினி அணியினரை ஆதரிப்பதாக தெரிகிறது. ரவி ஜயவர்த்தனாவின் மகன் பிரதீப் காமினியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் முக்கிய பங்கு வகித்ததாகவும் தெரிகிறது. பிரசார கூட்டங்களை வீடியோ படமெடுக்கும் பிரிவுக்கு பொறுப்பாக பிரதீப் இருந்தாராம்.

ஆனால் ஜே.ஆர்.ஜயவர்த்தனவோ, ரவி ஜயவர்த்தனவோ தாங்கள் எந்தப்பக்கம் என்பதை இன்னும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

www.padippakam.com



# ஒரு வரலாற்று திருப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் பொதுசன முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவை ஆதரித்து ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளால் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது. அது மட்டுமன்றி தமிழ், முஸ்லீம் மக்கள் இத்தேர்தலை ஓர் சர்வசன வாக்கெடுப்பாகக் கணித்து வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டும் உள்ளது. மேற்படி தீர்மானத்தை மேற்கொள்வதற்கான தமது நியாய நிலைப்பாட்டினை கூட்டணி சார்பாக அதன் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் விளக்கியும் உள்ளார். அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா வரலாற்றில் வேறுபட்ட ஒரு தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதித் தேர்தலில் எடுத்திருக்கிறது என்று கூறியதுடன் இன்று பெற்றுள்ள அனுபவங்களுக்குப் பிறகு நாங்களும் ஒரு புதிய அணுகுமுறையைக் கொள்ள வேண்டும் என்று பல தடவைகள் சிந்தித்தே இம்முடிவினை எடுத்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழர் கூட்டணியின் மேற்படி முடிவினை சகல ஜனநாயக முற்போக்கு சக்திகளும் மனமார வரவேற்கவே செய்வார்கள். ஏனெனில் வரலாற்றில் மாறுபட்ட தீர்மானம் மட்டுமல்லாது வரலாற்றின் முக்கிய கட்டத்தில் முதல் தடவையாக ஓர் முற்போக்கான தீர்மானத்தையும் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இது வரலாற்றுப் பட்டறிவு மட்டுமன்றி சூழலின் நிர்ப்பந்த நிலையுமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு முந்திய தமிழரசுக் கட்சி என்பனவற்றின் தலைமைத்துவத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் பூரணமாக நம்பினார்கள். ஆனால் அத்தலைமை அம் மக்களுக்கு நம்பிக்கை விசுவாசமாக நடந்து கொண்டதாக இருக்கவில்லை. பழைமை பேணல், மிதவாதம், உயர்வர்க்க சார்பு என்பனவற்றை முதன்மைப்படுத்தி இலங்கை அரசியலில் முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு தமது புறமுதுகையே காட்டி வந்தனர். அரசியல் அரங்கிலே நெருக்கடி மிகுந்த வேளைகளில் எல்லாம் உயர்வர்க்க நிலையும் விதேசிய அரவணைப்பும் கொண்ட யூ.என்.பிக்கு தோள் கொடுத்து உதவும் போக்கினையே தொடர்ச்சியாக அவர்கள் கடைப்பிடித்தார்கள். கடந்த பதினேழு வருட கால ஐ.தே. கட்சி ஆட்சியின் நிலைப்பிற்குச் கூட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்கு எவ்வகையிலும் குறைந்ததாக இருக்கவில்லை. 1982ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் தேர்தலில் பங்கு கொள்ளவில்லை என்னும் தீர்மானத்தை மேற்கொண்டதன் மூலம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் வெற்றிக்கு உதவினார்கள். அத்துடன் அன்றைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு வடக்கில் அளிக்கப்பட்ட அமோகமான வாக்குகளை வெங்காயம், மிளகாய் வாக்குகள் என கிண்டல் செய்தவர்களும் கூட்டணித் தலைவர்களே என்பதும் நினைவூட்டத் தக்கதாகும். அவ்வாறெல்லாம் நடந்து கொண்டு தவறான அரசியல் முடிவுகளை அத்தலைமை எடுத்துக் கொண்டதன் பின் விளைவுகளை விரைவாகவே அனுபவிக்க முடிந்தமையை இங்கு சுட்டிக் காட்டித்தான் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. ஏறத்தாழ எல்லாம் இழந்த நிலையில் சங்கும் போச்சு மணியும் போச்சு என்பதற்குரிய சந்தர்ப்பத்திலேயே கூட்டணிக்கு கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணம் கைகொடுத்து உதவியுள்ளது. அதனை ஒரு தெப்பக் கட்டையாகப் பாவித்து கரை ஏறிய கூட்டணி தமது பழைய யூ.என்.பி. ஆதரவுப்பாதையில் செல்லும் போக்கை இடைநிறுத்திக் கொண்டது. இதில் வயதான தலைவர்களுக்கும் நடுத்தர வயதினருக்குமிடையில் கடுமையான கருத்து வேறுபாடு நிலவியது. இறுதியில் நடுத்தர வயதுத் தலைமையினரின் கருத்து மேலோங்கியே பொதுசன முன்னணி ஆட்சிக்கு ஆதரவு நிலை தோன்றியது. அதன் மற்றொரு கட்ட வளர்ச்சியே ஜனாதிபதித்



தேர்தலில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவிற்கான தெளிவு மிக்க ஆதரவு நிலையாகும்.

தமிழர் கூட்டணியின் இத்தகைய முற்போக்கான தீர்மானத்திற்காக ஜனநாயக முற்போக்கு சக்திகள் அதற்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டவர்களாக உள்ளனர். ஆனால் இத்தகைய ஒரு தீர்மானம் மட்டும் தமிழர் கூட்டணி இழைத்த தொடர்ச்சியான அரசியல் வரலாற்றுத் தவறுகளுக்கு பாவ மன்னிப்பாக அமைந்து விட முடியாது. ஏனெனில் அதன் வரலாற்றுத் தவறுகள் பல்லாயிரம் தமிழ் பேசும் மக்களின் உயிர் இழப்புகளோடும் உடமை அழிவுகளோடும் இடம் பெயர்ந்த வாழ்வோடும் இன்னும் பிற துன்பதுயரச் சுமைகளோடும் சம்மந்தமுடையவையாகும். அவற்றுக்கு உரியமுறையில் தமிழர் கூட்டணித் தலைமை மன்னிப்புக் கேட்கும் நிலைக்கு வரவில்லை. அப்படி வரவேண்டுமானால் கடந்த காலத்தின் அரசியல் முடிவுகளைப் பற்றி சுய விமர்சனத்திற்கு வருவது மட்டுமல்லாது மீண்டும் பழைய பாதைக்குச் செல்வதில்லை என்ற திடசங்கற்பத்தையும் உறுதிமொழியினையும் தமிழ் மக்கள் முன் வைப்பதற்கு தமிழர் கூட்டணித் தலைமை தயாராக இருக்கின்றதா?

தமிழர் கூட்டணியின் தற்போதைய தீர்மானத்தை வைத்துக் கொண்டு அதன் எதிர்கால நடவடிக்கையைத் தீர்மானிக்க முடியாது. வடக்கில் நிலைநிற்க முடியாததாலும் தெற்கில் யூ.என்.பி தோல்விக்கு உள்ளாகி உருக்குலைவதைக் கண்டிருப்பதாலும் புதிய ஆட்சியின் பிரதமர் தமிழ் மக்களை நாடிச் செல்வதாலும் தாங்கள் தனிமைப்பட நேர்ந்து விடுமோ என்று அஞ்சியமையால் தான் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அது ஆரோக்கியமானதாக இருக்க முடியாது. அவ்வாறன்றி அடிப்படையில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அவை ஜீரணிக்கக் கூடியதாகும்.

---

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் பதவியேற்ற பிறகும் கூட பாதுகாப்புப் படையினரை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாத சூழ்நிலையே தொடருகிறது. இந்நிலை தொடருமாயின் இலங்கையின் அரசாங்கத்தை பாதுகாப்பு படையினர் பொறுப்பேற்பது தவிர்க்க முடியாது என்று சர்வதேச அரசியல் வரலாற்றுத்துறை நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இராணுவம் ஆட்சியை பொறுப்பேற்பதற்கு சாதகமாக இருந்த சூழ்நிலைகளை ஒத்த சூழ்நிலைகள் தற்போது இலங்கையில் நிலவுகின்றன. பாதுகாப்பு படையினரில் நூற்றுக்கு நாற்பது சதவீதமானவரே ஆதரவாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினர் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் ஜனநாயக ரீதியான முழுப்பாதுகாப்பு படையினரையும் கட்டுப்படுத்தக்கூடிய சக்திமிக்க அரசாங்கம் ஒன்று ஆட்சியில் இருக்க வேண்டியது அவசியமாகும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்கட்சித் தலைவரும் ஐ.தே. கட்சியின் ஜனாதிபதி அபேட்சகருமான காமினி திஸாநாயக்க உட்பட சில ஐ.தே.கட்சி தலைவர்களும் குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை பற்றி 'புதியபூமி' ஆசிரியர் பீடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்படி தெரிவித்தார். பெயரை வெளிப்படுத்தி இந்த கருத்தை வெளியிடுவதை விரும்பாத அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த 17 வருடகாலமாக ஐ.தே. கட்சி நடத்திய மக்கள் விரோத ஜனநாயக விரோத ஆட்சியின் கீழ் பாதுகாப்பு படையினர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கவில்லை. இதை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க பி.பி.சிக்கு பேட்டியளித்த போது குறிப்பிட்டிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

கடந்த ஆகஸ்ட் 16 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தபோதும் நாட்டின் பாதுகாப்பு பொறுப்பு ஐ.தே.கட்சியை சேர்ந்த ஜனாதிபதியான டி.பி.விஜேதுங்காவிடமே இருக்கிறது. அவரும்



ஐ.தே.கட்சியின் ஜனாதிபதிகளாக இருந்த ஜே.ஆர்., பிரேமதாஸ போன்று மக்கள் விரோத போக்கையே கொண்டிருந்தார். வடக்கு கிழக்கில் யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் விருப்பம் கொண்டவராகவும் இருந்தார். அதனால் பாதுகாப்புப் படையினரைக் கட்டுப்படுத்த முடியாததாகவே இருந்தார். இன்னமும் இருக்கிறார்.

பொ.ஜ.ஐ.முன்னணியின் கொள்கைகள் காரணமாக பாதுகாப்பு படையினரின் உயர் உத்தியோகத்தர்கள் பலர் அதிருப்தி கொண்டவர்களாக இருக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய அரசாங்கம் எடுக்கும் சமாதான முயற்சிகள் முன்னைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அரசியற் படுகொலைகள் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணைகள் போன்றன பாதுகாப்பு படையினரின் அதிருப்திக்கு காரணங்களாக அமைகின்றன.

காமினி திஸாநாயக்க படுகொலை செய்யப்பட்டதை அடுத்து பொ.ஜ.ஐ.மு.அரசாங்கத்தின் விருப்பப்படி சமாதான தீர்வை காண்பது சாத்தியமில்லை' என்று பாதுகாப்பு படையினர் இடித்துக் கூறி வருகின்றனராம்.

படுகொலையை அடுத்து ஐ.தே. கட்சியின் தலைமைத்துவம் பலவீனப்பட்டிருப்பதை ஐ.தே.கட்சியில் இடம்பெற்ற சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. காமினியின் படுகொலையை வைத்துக் கொண்டு அனுதாபமுறையில் வாக்குகளை பெற வேண்டியநிலையில் திருமதி திஸாநாயக்கா ஜனாதிபதி அபேட்சகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்ஹ எதிர்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட போதும் அவருக்கு எதிராக ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் சிலர் கொலைப் பயமுறுத்தல்களை செய்துள்ளார். காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸவின் மனைவி ஹேமா ஐ.தே.கட்சிக்குள் இடம்பிடித்து விடுவதில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.

இந்நிலையில் ஐ.தே.கட்சிக்குள் ஹேமா பிரிவு, காமினி பிரிவு, ரணில் பிரிவு என பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இது ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயும் பிரதிபலிக்கும்.

இவ்வாறான சூழ்நிலைகளின் கீழ் பாதுகாப்பு படையினர் தன்னிச்சையாக இயங்கக்கூடிய சூழ்நிலையை ஐ.தே.கட்சியினூடாகவும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது என்பதை பாதுகாப்பு படையினர் உணருகின்றனர்.

இவ்வித காரணங்களினால் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை பாதுகாப்பு படையினர் கைப்பற்றுவதற்கு சாதகமான சூழ்நிலைகள் நிலவுவதாக அரசியல் ஆய்வாளர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இலங்கை இராணுவத்தினர் மனோவலிமை, சாதகமாக அமைந்து, ஏதாவது ஒரு நாடு பாதுகாப்புப் படையினர் ஆட்சியை அங்கீகரிக்க தயாராக இருக்குமானால் பாதுகாப்புப்படையினர் ஆட்சியை கைப்பற்றுவதையும் தவிர்ப்பது கடினம்.

அதனை தவிர்க்க ஒரே ஒரு வழிமுறை மட்டுமே இருக்கிறது. அதாவது பாராளுமன்ற பலத்தை பெற்றுள்ள பொ.ஜ.ஐ.முன்னணி பாதுகாப்புப் படையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். அதற்கு இலங்கை மக்கள் ஜனாதிபதி பதவியையும் பொ.ஜ.ஐ.முன்னணியிடமே கொடுக்க வேண்டும். அதன் பின்னர் நடைமுறையில் அரசாங்கம் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பையும் பெற பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தையும் தேடிக் கொள்ள வேண்டும்.

## தகுதியான அபேட்சகர்

காமினி கொல்லப்பட்டதை அடுத்து அவரது மனைவி சிறிமா திசாநாயக்க ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி அபேட்சகராக தெரிவு செய்யப்பட்டதை இந்தியா வரவேற்றுள்ளது. இந்தியாவுக்கு மிக நெருக்கமானவரின் மனைவியும் இந்தியாவுக்கு நெருக்கமானவராக இருப்பார் என்ற நம்பிக்கையில் இந்தியா அவரின் தெரிவை வரவேற்றிருக்கலாம். இந்திய அரசாங்கத்தின் சார்பில் காமினியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த இந்திய எம்.பி. திருமதி காமினிக்கும் வாழ்த்தைத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

வரி, கம்பனிச்சட்ட சட்டத்தரணியான திருமதி காமினி திசாநாயக்க நீதிமன்றங்களில் பேசினாரோ இல்லையோ மத்திய மாகாணசபையில் ஒரு போதும் உரையாற்றவில்லை. கடந்த மாகாணசபை தேர்தலில் டி.யூ.என்.எப்.பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு மத்திய மாகாணசபை உறுப்பினரானார்.

கடந்த ஒன்றரை வருடகாலத்தில் மத்திய மாகாணசபை கூட்டத்திற்கு இரண்டு முறை மட்டுமே பிரசன்னமாய் இருந்துள்ளார்.

அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் உரையாற்றவில்லை. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஒரு கடிதத்தை சமர்ப்பித்து விட்டு விடுமுறையை பெற்று மாகாணசபைக்கு செல்லாமல் இருந்துள்ளார். ஆனால் அவருக்கு உரித்தான சம்பளத்தை ஒழுங்காக பெற்றுக் கொண்டுள்ளார்.

www.padippakam.com





காமினி திசாநாயக்கா கொலை செய்யப்பட்டதனால் யூ.என்.பியின் ஜனாதிபதி அபேட்சகராக அவரது மனைவி சிறிமா திஸாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். காமினியின் மைத்துனரான பலவிதமான ஒழுங்கீனங்களுக்காக குற்றஞ் சாட்டப்படும் கலாநிதி. விக்கிரம வீரசூரியவின் முயற்சியினாலேயே சிறிமா திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அபேட்சகராக தெரிவு செய்யக்கூடிய யூ.என்.பியின் நிர்வாகக்குழு கூட்டத்தில் காமினிக்கு சார்பானவர்கள் காமினியின் மனைவியை முன்மொழிந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தினர்.

திருமதி ஹேமா பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்ஹ, சுசில் முனசிங்ஹ ஆகியோரின் பெயர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்களும் பிரேரிக்கப்பட்டதனால் காமினிக்கு சார்பானவர்கள் பெரும் கூச்சலிட்டு காமினியின் மனைவியே நியமிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். யூ.என்.பி தலைமையகத்திற்கு, வெளியிலும் காமினியின் ஆதரவாளர்கள் காமினியின் மனைவியே தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டங்களை செய்தனர்.

நிர்வாகக்குழுக் கூட்டத்தில் பெரும் கூச்சல் நீண்டநேரம் நிலவியதால் உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடியாத கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இடைநடுவே கூட்டத்தை விட்டு வெளியேற முற்பட்டார்.

சிரேஷ்ட யூ.என்.பி.அங்கத்தினர்களான எம்.எச்.மொஹமட், நந்தா மத்யூ ஆகியோர் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியதனைத் தொடர்ந்தே விஜேதுங்க தலைமை தாங்கினார்.

சிறிமா திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்ட போது அவர் யூ.என்.பி அங்கத்தினரல்லவென்றும் அவர் டி.யூ.என்.எப் அங்கத்தினரென்றும் ஆட்சேபம் எழுப்பி காமினிக்கு எதிரானவர்கள் கூச்சல் எழுப்பினர். நிர்வாகக்குழுவிலுள்ள காமினியின் ஆதரவாளர்களில் அதிகமானோர் இன்னும் டி.யூ.என்.எப் உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள் என்றும் அவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

அன்றைய கூட்டத்திற்கு சென்ற ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு காமினியின் ஆதரவாளர்கள் கொலை பயமுறுத்தல் செய்துள்...

## காமினி அவர்களே!

# இறந்தது நீங்கள...

...ளனர். அவ...
...டுத்தப்பட்டு...

சிறிமா திசா...
ரணில் வி...
விடுக்கப்பட்...
என்பவற்றுக்...
விமல் விக்...
தாக தெரிவி...
ரணில் விக்கி...
மொஹமட்,...
ரள, சந்தி...
ஹரல்ட் ஹே...

காமினி லெ...
கம் போன்ற...
னர்கள் சிறி...
ஆதரித்து பி...
ஈடுபடமாட்...
வெளிப்படை...
ளாதாக தெரிகி...

ஜனாதிபதி அ...
செய்யும் குழு...
ரநாயக்க...
இருந்துள்ளா...
சிறிமா திச...
செய்யப்பட்ட...
எதிரான...

## சாயிபாபாவின் பக்தன்

இலங்கையில் பௌத்த மதபீடாதிபதிகள் அரசியலில் முக்கியத்துவம் கொண்டிருப்பது போன்று இந்திய அரசியலில் ஆன்மிக சாமியார்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றனர். இந்திய அரசிற்கு ஆதரவான வெளிநாட்டு நண்பர்களை சம்பாதிப்பதிலும் உளவு தகவல்கள் சேகரிப்பதிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவில் ''பகவான் சத்திய சாயிபாபா'' வின் தொடர்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் ஜனாதிபதிகளாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன, பிரேமதாஸ ஆகியோரும், ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யூ.ஜயவர்த்தனவும் சத்திய சாயிபாபா பக்தர்களாவர். இவர்களில் யாவரும் சத்திய சாயிபாபாவை நேரில் சந்தித்துள்ளனர் என்றும் இவர்கள் சந்தித்த பிறகு இந்தியாவுடன் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர் என்பதும் கவனித்தக்கது.

இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்த ஜே.ஆர். சத்திய சாயிபாபாவின் பக்தனான பிறகே இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை கைச்சாத்திட்டார். பிரேமதாஸ இந்தியாவுக்கு எதிரான அவரின் கடுமையை மாற்றியது சத்திய சாயிபாபாவின் பக்தரான பிறகே ஆகும்.

காமினி திசாநாயக்காவும் கூட சத்திய சாயிபாபாவின் பக்தராவார் என்று அறியமுடிகின்றது. செப்டெம்பர் மாதம் அவர் இந்தியாவிற்கு சென்றிருந்த போது சாயிபாபாவை சந்தித்தார் என்றும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அவரின் ஆசிர்வாதத்தைப் பெற்றார் என்றும் சொல்லப்படுகிறது.

அப்போது காமினி திசாநாயக்கவிற்கு அரசியலில் அதிகமான எதிரிகள் இருப்பதாகவும் அது குறித்து நிதானமாக இருக்கும்படியும் சாயிபாபா குறிப்பிட்டதாகவும் வதந்திகள் அடிபடுகின்றன.

இதேபோன்று ஜே.ஆரின் சகோதரரின் இறப்பு சாயிபாபா அறிவித்தபடி இந்தியாவிலேயே நிகழ்ந்தது என்றும் பிரேமதாஸாவின் இறப்பு குறித்தும் அவர் தெரிவித்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

## இந்தியாவின் நண்பன்

காமினியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள இந்தியப்பிரதமரின் விஷேட தூதுவரான இந்தியப் பாராளுமன்ற ஆளும் கட்சி எம்.பி சிந்தி இலங்கை வந்திருந்தார். அவர் இந்திய பிரதமர் நரசிம்மராவின் அனுதாபச் செய்தியை இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இந்திய அரசாங்கத்துடன் காலஞ்சென்ற காமினி திசாநாயக்க மிகவும் நெருக்கமானவராக இருந்தார். 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் அவர் மிகவும் முக்கியமானவராக இருந்தார்.

இவரின் கொலையை அடுத்து செய்தி அறிக்கையொன்றை வெளியிட்ட பி.பி.சி நிறுவனம் ''இவர் தமிழ் மக்களுக்கு எதிரானவராகவும், இந்தியாவின் நெருங்கிய நண்பராகவும் கணிக்கப்படுகிறார், இவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் இந்தியாவின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படுவார் என்பதும் விடுதலைப்புலிகள் இவரைக் கொன்றதற்கு காரணமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டது.

இவர் கடந்தமாதம் இந்தியாவுக்கு சென்றிருந்த போது முக்கிய இந்திய தலைவர்களை சந்தித்துள்ளதாக தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தொண்டமான் தன்னை ஆதரிக்க வேண்டும் எனவும், அதற்காக இந்தியத் தலைவர்கள் தொண்டமானை வற்புறுத்த வேண்டும் என்றும் இவர் கேட்டுக் கொண்டதாக தெரிகிறது. இவர் இலங்கைக்கு வந்த பிறகு தொண்டமான் இந்தியாவுக்குச் சென்றிருந்தமை தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு வந்த இந்திய சமாதானப் படை ஏறக்குறைய 20 ஆயிரம் தமிழ் மக்களை கொன்றதாகவும், நூற்றுக்கணக்கான தமிழ் பெண்களை கற்பழித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டதும் தெரிந்ததே. இந்திய சமாதானப் படையினர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கம்பியூட்டர் கற்கைப் பிரிவை தகர்த்து நாசப்படுத்தினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. (யாழ் நூலகத்தை ஏற்கனவே எரித்ததாக காமினி மீது குற்றம் சாட்டப்பட்டது).

காமினி திசாநாயக்காவை பலியெடுத்த பாலத்துறை குண்டு வெடிப்புக்கு விடுதலைப்புலிகள் மீது மட்டுமன்றி ஏனைய தமிழ் தீவிரவாத அமைப்புகள் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது.

அந்த அடிப்படையில் ஏனைய தமிழ் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய யூ.என்.பி. தலைவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலை கூட்டணி எம்.பிக்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரை விடுதலைப்புலிகளே கொலை செய்தனர் என்று கூறப்பட்ட போதும் வேறு ஒரு தீவிரவாத தமிழ் இயக்கமே கொலை செய்ததாக இப்போது தெரியவருகிறது.

ஒரே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கிழக்க செய்வதற்காக இந்திய உளவு ஸ்தாபனமான 'RAW' மேற்படி எம்,பிக்களை கொலை செய்வித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 'RAW' வின் அந்த தேவையை நிறைவேற்றுவதற்காகவே அந்த வேறு ஒரு தமிழ் தீவிரவாத இயக்கம் அந்த எம்.பிக்களை கொலை செய்து விட்டு திட்டமிட்டு விடுதலைப்புலிகளின் தலையில் போட்டதாகத் தெரிகிறது.

பாலத்துறை குண்டு வெடிப்புக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்ற சந்தேகம் பரவலாக இருப்பதை காணமுடிகின்றது. இந்த சந்தேகம் பரவலாக இருப்பதால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் விடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியின் படி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டி விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முடிவடைந்தது. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பதாக பாலத்துறை குண்டு வெடிப்பு நடந்தது. அதில் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே. கட்சி அபேட்சகருமான காமினி திசாநாயக்க உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

எனவே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் காலவரையறையின்றி ஒத்தி வைத்தது. ஐ.தே.கட்சி அரசாங்க காலத்தைப் போன்று சம்பவம் நடந்த உடனேயே அச் செயலுக்கு விடுதலைப் புலிகளே காரணமென்று வானொலி, தொலைக்காட்சி என்பன மக்களுக்கு அறிவிக்கவில்லை. விசாரணைகள் முடியாமல் அச்சம்பவத்திற்கு யார் காரணம் என்று அறிவிக்க முடியாது என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். அரசாங்கமும் அப்படியே கூறியது.

ஆனால் ஐ.தே.கட்சியினர் குறிப்பாக காமினியின் மைத்துனர் கலாநிதி விக்கிரமவீரசூரிய முன்னாள் சபாநாயகள் எம்.எச்.மொகமட் என்போர் அச்செயலுக்கு புலிகளே காரணம் என்று கூறி புலிகளுடன் அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளும், பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கமும் இணைந்து மேற்கொண்ட சதியே காமினியின் கொலை என்று மொகமட் கூறினார். இந்த பேச்சு பாலத்துறை குண்டு வெடிப்பு, விடுதலைப்புலிகளுடனான எதிர்கால சமாதான பேச்சுகள் என்பன தொடர்பாக அரசாங்கம் சாதித்துவந்த மௌனத்தை கலைத்தது.

கடந்த 27ம் திகதி பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி அரசாங்கம் அதனது நிலைப்பாட்டை தெரிவித்தது. அந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதமர், தகவல் அமைச்சர், வெளி விவகார அமைச்சர், பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்மாநாட்டில் பத்திரிகையார்களுக்கு விளக்கமளித்த பிரதமர் சந்திரிகா விடுதலைப்புலிகள் பாலத்துறை குண்டுவெடிப்பைச் செய்யவில்லை என்றோ, செய்தனர் என்றோ விசாரணைகள் முடியுமுன்னர் கூறமுடியாது என்று கூறினார். சமாதான பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இப்படியான சம்பவங்கள் ஏற்பட்டுள்ளபோதும் கூடியவிரைவில் மீண்டும் சமாதான முயற்சிகள் தொடரும் என்று கூறினார்.

சமாதான முயற்சிகளை மேற்கொண்டு நடத்துவது பற்றி ஒரு தடுமாற்றத்தை அவரிடம் காண முடிந்தது. பாலத்துறை குண்டு வெடிப்பு காரணமாக ஜனாதிபதி தேர்தலில் தனக்கு பாதிப்பு ஏற்படும் என்று யோசித்தாரோ தெரியவில்லை. உண்மையில் இச்சம்பவம் அரசிற்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் ஐ.தே.கட்சியின் புதிய ஜனாதிபதி அபேட்சகராக தெரிவு செய்யப்பட்டுள்ள காமினியின் மனைவி சிறிமா திசாநாயக்க பாலத்துறை குண்டு வெடிப்பை பற்றியும், விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை பற்றியும் விமர்சித்து வாக்குகளை சேகரிக்க முற்படலாம். ஐ.தே.கட்சியினர் மேற்படி குண்டு வெடிப்பை கண்டித்து விடுதலைப்புலிகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்க...

## அரசியல் தீர்வு என்...

வெண்டுமெ...
'முன்னணிக்கு...
து'' என்று...
தொடங்கி வி...

'குண்டு, வெ...
பெரும்பான்...
வசிக்கும் ப...
ராயம் திரட்...
பூமி' பத்...
முடிவின் ...
பொது ஜன ஐ...
கிடைத்த வா...
யில் வீழ்ச்சி...
என்று தெரி...

எனினும் ஒ...
துக்கும் பதி...
கம் 'சுத்த...
காட்ட வே...

...னத்தை செ...
முன்னணி ...
டைந்துள்ளத...

27 ஆம் திக...
மாநாட்டை ...
காப்பு அமை...
வத்தை ...
அளித்த பேட...
சிகளில் அ...
காட்டுமோ ...
டுத்தியுள்ளது...
கால சமாதா...
மாறாகக் கை...
பாதுகாப்பு ...
வழிகளில் தீ...
வியடையுமெ...
நடவடிக்கை...
வரும் என்று...
ணுவ நடவடி...
டம் தயாரா...
தெரிவித்தார்...
ரக்கு போதி...
இட்டால் வெ...
யம் என்றும்...

இவ்வேளை...
னணி அரசு...
வேண்டிய ...
சமாதான மு...
னவர்களுக்கு...
கைகளை ...
வேறு, இனப்...
தான முறை...
காண்பது எ...

படிப்பகம்

www.padippakam.com



ரணில் ஆதரவாளர்கள் ஈடுபட்ட தாகத் தெரிகிறது. ஜனாதிபதியை சந்தித்து திருமதி.திசாநாயக் கவை நீக்கவிட்டு ரணிலை நிய மிக்கக் கோரிக்கையை விடுத்துள் ளனர்..

அதேபோன்று ரணிலை எதிர் கட்சி தலைவராக தெரிவு செய் ததை எதிர்த்து காமினியின் ஆதர வாளர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரிகிறது. ஆக, காமினியின் கொலையை ளையே யூ.என்.பி. நம்பியிருப் பது தெளிவாகிறது.

ஜே.வி.பி. நடவடிக்கை உச்சக் கட்டத்தில் இருந்த போது பிரேம தாஸ ஜனாதிபதி அபேட்சகராக தெரிவு செய்யப்பட்டாலும் அவர் ஜனாதிபதியான பிறகு யூ.என்.பியை பலப்படுத்தினார் அல்லது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார் என்று கூறலாம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக் குப் பிறகு திருமதி.திசாநாயக்க அச்சுறுத்தல்) இன்றைய நிலைமை அவ்வாறில்லை. இன்று கட்சிக்கு உள்ளேயே பிரச் சினைகள் தலைவிரித்தாடுகின் றன.

ஆகவே யூ.என்.பி. அதனது அரசி யல் வரலாற்றில் என்றுமில்லாத வாறு பலவீனப்பட்டிருக்கிறது என்பதை யூ.என்.பியின் சிரேஷ்ட அங்கத்தினர்களே தெரி விக்கின்றனர்.

இந்நிலையில் காமினிக்கு அனு

# இறந்தது நாங்களே!

அடுத்து யூ.என்.பி. பல பிரிவுக ளாகியுள்ளது. ஒரு ஜனாதிபதி அபேட்சகரை பிரச்சினையில்லா மல் நியமிக்க முடியாத நிலை யிலே இருந்தது.

கலாநிதி விக்கிரம வீரசூரியவின் முயற்சியினால் திருமதி.திசாநா யக்க தெரிவு செய்யப்பட்டார் என்பதை விட அவரை தெரிவு செய்யும் அளவிற்கு யூ.என்.பி. பலவீனப்பட்டுள்ளதாகவே உணரமுடிகிறது. அவரை தெரிவு செய்ததன் மூலம் ஜனாதிபதி தேர்தலில் அனுதாப வாக்குக தலைமையில் யூ.என்.பியை பலப்படுத்த முடியுமா கட்டுப்ப டுத்த முடியுமா என்பது சந்தே கமே. ஏற்பட்டுள்ள பிளவுக ளுக்கு காரணமாக விளங்கும் அவர்; எப்படி பிளவுகளை நீக்க முடியும்.

பிரமேதாஸ ஜனாதிபதி அபேட்ச கராக தெரிவு செய்யப்பட்ட போது ஜனாதிபதி அபேட்சகராக யாரும் முன்வரவில்லை. முன்வ ரக் கூடிய நிலையில் கட்சிக்கு வெளியிலான நிலைமை சாதக மாக இருக்கவில்லை. (ஜே.வி.பி தாபம் தெரிவித்து யூ.என்.பி அங் கத்தினர்கள் ஆதரவாளர்களால் போடப்பட்டிருந்த அனுதாபப் பதாகைகள் சிலவற்றில் சிங்க ளத்தில் காணப்பட்ட வாசகங் களை நோக்குவது பொருத்தமா னதாகலாம். ''கௌரவ காமினி திசாநாயக்க அவர்களே இறந்தது நீங்களல்ல; இறந்தவர்கள் நாங்க ளே'' (கரு காமினி திசாநாயக்க துமனி மியகியே ஒப நெத்த; மிய கியே அபிய்)

தும்.

இனப்பிரச்சினைக்கு யுத்தம் செய்வதன் மூலம் தீர்வு காணமு டியாது என்பது முடிந்த முடிபா கும். அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டியதில்லை.

கடந்த பத்து வருடகாலமாக இனப்பிரச்சினைக்கு இராணுவரீ தியாக தீர்வு காணமுடியாது என் பது இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களுக்கு ஏற்க னவே தெரியும். பொதுஜன ஐக் கிய முன்னணி வென்ற பிறகு பெரும்பான்மை சிங்கள, முஸ் லீம் மக்கள் யுத்தத்திற்கு எதிரான வர்கள் என்பதையும் ஆரம்பிக் கப்பட்ட சமாதான முயற்சிக ளுக்கு பிறகு பெரும்பான்மை

## ...றம் வேண்டாம்

தமிழ் மக்கள் வழங்கிய ஆதர வையடுத்து யுத்தத்திற்கு தமிழ் மக்களும் எதிரானவர்கள் என்ப தும் பல அரசியல்வாதிகளுக்கு தெளிவானது.

எனவே இராணுவத்திற்கு மேல திகமான ஆயதங்களை வழங்கு வதன் மூலமோ போதிய கட்ட ளைகளை பிறப்பிப்பதன் மூலமோ தமிழ் மக்களின் பிரச்சி னைக்கு தீர்வு காணமுடியாது. மாறாக, தமிழ் மக்களின் பிரச்சி னைக்கு தீர்வு அரசியல் ரீதியான தாகவே இருக்கமுடியும்.

பாலத்துறை குண்டுவெடிப் புக்கு விடுதலைப்புலிகளே கார ணமென்று விசாரணைகள் மூலம் தெரிய வந்தால் அவர்க ளுக்கு எதிராக சட்டரீதியாக நட வடிக்கைகளை எடுக்க தடை எது வும் இல்லை. அவர்கள் தான் செய்தார்கள் என்று அறிந்தால் சமாதான முயற்சிகளை குழப்ப அல்லது கைவிட அரசாங்கம் முற்படலாகாது.

யுத்தமொன்றை நடத்தி முடித்து விட்டு இனப்பிரச்சினைக்கு அர சியல் தீர்வு காண முடியாது என் பது நடைமுறைகள் மூலம் நிரூ பிக்கப்பட்டுள்ளது. அரசியல் தீர்வை காண்பதன் மூலமே யுத் தத்தை முடிவுக்கு கொண்டவர முடியும் என்பதே இன்று எம் முன்னுள்ள உயர்ந்ததெரிவாகும்.

அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற முடிவில் அரசாங்கம் எவ் வித மாற்றத்தையும் ஏற்படுத்தத் தேவை இல்லை. அப்படி ஏற்ப டுத்துவதன்ால் பிரச்சினை தீரப் போவதில்லை. நிலைமை பார தூரமாக அமையும். சமாதான முயற்சிகளுக்கு எதிராக எதிர்கட் சியும், ஏன் அரசாங்கத்திற்குள் ளும் இருக்கும் இனவாத சக்திக ளும் மேற்படி குண்டுவெ



டிப்பை அடுத்து விழித்துக் கொண்டுள்ளன என்பது உண் மையே.

ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக் குவதனை மட்டும் கருத்தில் கொண்டு சமாதான முயற்சிக ளுக்கு மாறாக அரசாங்கமோ, அரசாங்கத்தில் எவரும் கதைப் பது தீர்க்க தரிசனமானதாக அமையாது.

இவ்விடத்தில் 27 ஆம் திகதி பத்தி ரிகையாளர் மாநாட்டில் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டதை கவ னிக்க வேண்டியது அவசியம். உலக நாடுகளில் நடந்த, நடக் கின்ற சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்குடன் அல்லது குழப்புவதாக சில சம்பவங்கள் நடைபெறாமல் இல்லை. அந்த சம்பவங்களையும் மீறி சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது என்று அவர் கூறி னார்.

அவ்வாறான உதாரணங்களை நாம் பாடமாக கொள்ளல் வேண் டும். சமாதான யாத்திரைக்கு சில சம்பவங்கள் தடையாக அமை வதை தவிர்க்க முடியாது. அதற் காக நாம் யாத்திரையைக் கைவிட முடியாது. ஏனெனில் சமாதான யாத்திரை என்பதே தீர் வும் பெரும்பாலான மக்களின் விருப்பமும் ஆகும்.

தென்னாபிரிக்காவில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற் றுக் கொண்டிருக்கும் போது தென்னாபிரிக்க விடுதலை முன் னணியின் முக்கிய அங்கமான தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட் சியின் தலைவர் கிறிஸ் ஹானி படுகொலை செய்யப்பட்டார். அவர் நெல்சன் மண்டேலாவுக்கு அடுத்த தலைவராக இருந்தபோ தும் அவரது கொலையால் சமா தான முயற்சிகளை தென்னாபி ரிக்க தலைவர்கள் கைவிட வில்லை. சமாதானத்திற்கு எதிரா னவர்கள் அவரை கொலை செய் ததன் மூலம் சமாதான முயற்சி களை தடுத்து நிறுத்த முற்பட்ட னர். அதற்கு சமாதானத்தை வேண்டிநின்ற தென்னாபிரிக்க தலைவர்களோ, மக்களோ அடி பணிந்து விடவில்லை. அதற்கு அடிபணிந்திருப்பின் புதிய தென் னாபிரிக்கா உதயமாகி இருக் காது.

இதுபோன்று எம் கண்முன்னே இருக்கும் ஆயிரமாயிரம் உதார ணங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்வோமாக.

இக்குண்டு வெடிப்பினைய டுத்து பெரும்பான்மை சிங்கள மக்கள் சமாதான முயற்சிகளுக்கு எதிராக இருப்பதாக கொள்ளல் முடியாது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயக மும், அமெரிக்க ஜனாதிபதியும் இக்குண்டுவெடிப்பை கண்டித் துள்ளதுடன், சமாதான முயற்சி களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை அர சாங்கத்தை கேட்டுக் கொண்டுள் ளனர்.

இதனை உற்று நோக்க வேண்டிய தும் அவசியமாகும்.







## புதுப்பாடத்தைப் படிப்போம்

ஜனநாயக வழிமுறைகளை சரியான முறையில் பிரயோ கித்து இந்நாட்டின் சகல இன மக் களின் உரிமைகளையும் மதித்து நடந்திருந்தால் இன்றைய நிலைமை ஏற்படாது தவிர்த்தி ருக்க முடியும் என்று இ.தொ.கா தலைவர் எஸ். தொண்டமான் எம்.பி குறிப்பிட்டார்.

கொலை செய்யப்பட்ட காமினி திசாநாயக்காவின் இறுதிகிரியை களில் கலந்து கொண்டு சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்ற கூட்டத் தில் அஞ்சலி உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்படி குறிப் பிட்டார்.

''இலங்கையில் தான் முதன்முத லில் ஆண் பெண் இருபாலாருக் கும் சர்வஜன வாக்குரிமை 1931 இல் கிடைத்தது. ஆனால் அந்த வாக்குரிமை 1947இல் இந்நாட் டின் மக்களில் ஒரு பகுதியின ரான இந்திய வம்சாவளி மக்களி டமிருந்து பறிக்கப்பபட்டது.

அந்த உரிமையை மீண்டும் பெறு வதற்காக இந்திய வம்சாவளி மக் கள் அகிம்சையான வழியி லேயே போராடினர். அவர்கள் வன்செயலில் இறங்கவில்லை.

எனினும் 1947 முதல் இந்நாட் டின் ஜனநாயக வழிமுறைகள் சரி யான வழியில் பயன்படுத்தப்பட வில்லை. இந்நாட்டு மக்கள் இன ரீதியாக பாரபட்சம் காட்டப்பட் டனர். இந்நாட்டு மக்களின் ஜன நாயக உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டன.

எமது நாட்டில் ஜனநாயக வழிமு றைகள் சரியான வழிகள் பிரயோ கிக்கப் பட்டிருந்தால் இன்று எமது நாட்டிற்கு ஏற்பட்டிருக் கும் இந்த நிலைமையை தவிர்த் திருக்க முடியும்.

கடந்தகால தவறுகள் எதிர்காலத் தில் நடக்காமல் நாம் எம்மை திருத்திக் கொள்ள வேண்டும்.

காமினியின் கொலையிலிருந்து நாம் ஒரு புதுப்பாடத்தை படிக்க வேண்டியவர்களாக இருக்கி றோம்'' எனவும் அவர் குறிப்பிட் டிருந்தார்.

www.padippakam.com



# அரசாங்கத்துக்கான நெருக்கமே மலையக அரசியலா?

டி.கிருஸ்ணசாமி

ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போவதாக கூறிய இ.தொ.க.தலைவர் தொண்டமான் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சராகி விட்டார். இதனால் இ.தொ.கா. அரசாங்கத்தின் ஒரு அங்கமாகி விடுகிறது.

இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையாக வெற்றி பெறுவதற்கு வாய்ப் பேற்பட்டுள்ளது. காமினியின் இறப்பை அடுத்து ஐ.தே.கட்சி இனவாதத்தை அதனது பிரசாரமாக கொண்டுள்ளது. இந்நிலையில் தொண்டமான் அரசாங்கத்துடன் சேர்ந்தது அரசாங்கத்திற்கு பலம் சேர்த்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைப்பதற்கு தேவையாகவிருந்த ஒரு ஆதரவை வழங்கியதன் மூலம் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அரசாங்கத்திற்கு உதவி புரிந்தார்.

அவர் இப்போது பிரதியமைச்சராக இருக்கிறார்.

கொழும்பு மாவட்டத்தில் பொ.ஜ.ஐ.முன்னணியில் போட்டியிட்டு 12 ஆயிரம் வாக்குகளை பெற்றதன் மூலம் கொழும்பில் ஐ.தே.கட்சியிலிருந்து மேலும் ஒருவர், இருவர் தெரிவு செய்யப்படுவதை தடுத்தார் செல்லச்சாமி.

அவர் இப்போது பட்டு உற்பத்தி, உப உணவுப் பயிர்ச்செய்கை சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

செங்கொடிச் சங்கம் உறவு வைத்துள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பிக்களும் ஒரு அமைச்சரும் இருக்கின்றனர்.

அதேவேளை ஏனைய மலையக தொழிற்சங்கங்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிக்கின்றன.

எனவே முழு மலையகமும் பொதுஜன ஐக்கிய முன்னணியையே ஆதரிக்கின்றது என்பது மட்டுமல்ல அரசாங்கத்தில் செல்வாக்குடையதாகவும் இருப்பதாக கூறலாம்.

இந்நிலைமையில் மலையக மக்களின் உரிமைகள் தொடர்பாக ஒருமித்து அரசாங்கத்தை வற்புறுத்த முடியும். மலையக வரலாற்றில் மலையக அமைப்புகள் ஒருமுகமாக நின்றது இதுதான் முதற்தடவை என்று கூறினால் பிழையாகாது.

ஐ.தே.கட்சியில் கடந்த 17 வருடமாக இ.தொ.காவின் அமைச்சர்களும் எம்.பிக்களும் இருந்தனர். 1989இற்கு பிறகு ஒரு அமைச்சரும், இரண்டு பிரதியமைச்சர்களும் எம்.பிக்களும் இருந்தனர்.

இ.தொ.கா. தலைவர் தொண்டமான் இலங்கையிலிருந்த ஐ.தே. கட்சியின் மூன்று ஜனாதிபதிகளுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார். அரசாங்கத்தின் செல்வாக்கைப் பாவித்து இ.தொ.கா தலைவர்கள் மலையகத்தின் ஏனைய அமைப்புகளுக்கு எதிராக ஜனநாயக விரோதமாக நடந்து கொண்டனர்.

மலையக மக்களுக்கு ஏறக்குறைய சகல உரிமைகளையும் வாங்கிக் கொடுத்து விட்டதாக இ.தொ.கா.தலைவர்கள் தெரிவித்தனர்.

இவ்வேளையில் இந்தியவிலிருந்து பாசிமணிவியாபார நிமித்தம் கடந்த மாதம் வந்திருந்த ஒரு மலையக தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை பற்றி குறிப்பிட்டதை நினைவு கூர்வது அவசியம்.

'உலகிலேயே மிகவும் பின்தங்கிய முன்னேற்றமடையாத ஒரு கூட்டம் வாழ்கின்றதென்றால் அது மலையக தோட்டத் தொழிலாளர்களே. நான் மலேசியா, சிங்கபூர், தாய்லாந்து போன்ற பல உலக நாடுகளுக்கு சென்றிருக்கின்றேன். அந்த அனுபவத்தை கொண்டு பார்த்தால் இலங்கையில் வாழும் தோட்டத் தெழாலாளர்கள் ஒரு சராசரியான வாழ்க்கையாவது நடத்துகிறார்கள் என்று கூறமுடியாது' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் மிகவும் பின்தங்கிய சமூகமாக கொள்ளப்படும் சமூகத்தை சேர்ந்த ஒருவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார் என்றால் இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறான வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது தெரிகிறதல்லவா?

ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் நெருக்கமாகவும் அரசாங்கத்தில் எம்.பிக்களையும் அமைச்சர்களையும் கொண்ட மலையக அமைப்பாக இ.தொ.கா. இருந்தும் சாதித்தது என்ன?

மலையக மக்களுக்கென இருக்கும் ஒரேயொரு ஆசிரியர் பயிற்சி கலாசாலை தோட்ட தொழிற்சாலையில் வசதிகளற்ற நிலையில் இயங்குகிறது.

ஒரேயொரு கல்விக்கலாசாலையான ஸ்ரீபாத கல்விக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. மலையக மக்களுக்கு சொந்தமாக வீடில்லை, காணி இல்லை, போதுமான சம்பள வாய்ப்பை தரும் தொழிலும் இல்லை.

ஐ.தே.கட்சிக்கு மாறான கூடியளவு ஜனநாயக தன்மை கொண்டதாக விளங்கும் பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கத்திலும் இ.தொ.காவும் சில மலையக அமைப்புகளும் பதவிகளையும் பட்டங்களையும் எடுத்துக் கொண்டிருப்பதன் மூலம் மட்டும் மலையகத்தை முன்னேற்றிவிட முடியாது. மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபட்டு பாடுபட வேண்டும்.

மாறாக, தங்களது சொந்த நன்மைகளுக்காகச் சொந்த வளர்ச்சிக்காக அரசாங்க செல்வாக்கை பயன்படுத்தி மக்கள் விரோத நிலைப்பாட்டை எடுத்தால், மலையக மக்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் எதிராக ஜனநாயக விரோத நிலைப்பாட்டை எடுத்தால் மலையக மக்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன் அந்த அமைப்புகளும் மலையக மக்களிலிருந்து அந்நியப்பட வேண்டி வருவதுடன் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு எதிரான நிலைப்பாட்டை மலையக மக்கள் எடுக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுவார்கள்.

பொ,ஜ.ஐ.முன்னணி முழு நாட்டு மக்களுக்கும், ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உறுதி செய்யப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளது. சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்போவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளது. அதனது ஆரம்ப நடவடிக்கைகள் நம்பிக்கை தருவதாகவும் இருக்கின்றன.

இந்த சூழ்நிலையில் பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்தை ஆதரிக்கும், அதில் அங்கம் வகிக்கும் மலையக அமைப்புகளும் மலையக மக்களின் ஜனநாயகம், மனித உரிமைகள் இன உரிமைகள் என்பவற்றை வாயளவில் அல்லது அரசியல் மேடைகளில் பேசுவதாக மட்டுமன்றி உண்மையாகவே மதிப்பனவாக இருக்க வேண்டும். மதிப்பனவாக இருப்பது மட்டுமன்றி அரசாங்கத்துக்கு ஆதரவாக இருக்கும் அமைப்புகள் அவை ஒன்றையொன்று அறுப்பனவாகவன்றி மலையக மக்களின் பொது நன்மையை கருத்திற்கொண்டு ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டியது அவசியம்.

அரசாங்கத்துடன் கூடிய நெருக்கம் கொண்டதான கூடிய சலுகைகளை அனுபவிக்கும் சிறப்புரிமை கொண்டதான அமைப்பாக தமது ஒரு அமைப்பு மட்டுமே இருக்க வேண்டும் என்ற போட்டியில் அரசாங்கத்தை ஆதரிக்கும் மலையக அமைப்புகள் ஈடுபட்டால் மலையக சமூகம் குட்டிச் சுவராய் போவதை தவிர வேறு விமோசனத்தை பெற முடியாததாகி விடும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தது பெரிய அரசியற் சாதனை என்று மக்கள் மத்தியில் தம்பட்டம் அடிப்பதையே அரசியல் வேலையாக கொள்ளக்கூடாது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களுக்கு வழகப்படும் என்று கூறப்பட்ட உரிமைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அவை மட்டுமன்றி மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்ய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

மலையக அமைப்பின் ஒவ்வொரு அமைப்பும் தத்தமது எதிர்கால அரசியலுக்கு வசதியாக பேரம் பேசுவதையே அரசியலாக கொள்ளாமல் அரசியலமைப்பிலேயே மலையக மக்களின் உரிமைகளை உறுதி செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துடனான நெருக்கம், பேரப் பேச்சு என்பனவற்றை மட்டுமே அரசியலாக கொண்டு விடக் கூடாது. அதன் மூலம் தங்களது சங்கங்களை வளர்ப்பது மட்டுமே அரசியலாகவும் முடியாது.

# சமாதானத்திற்கு எதிரானவர்கள் தோல்வியடைவார்கள்

வை.பி.டி.சில்வா எம்.பி

இனப்பிரச்சினை தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்படும் சகல சக்திகளுக்கும் எதிராக போராடி அவர்களை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று இலங்கை மக்கள் கட்சியின் தலைவரும் பொதுஜன ஐக்கிய மன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான வை.பி.டி. சில்வா சகல இனமக்களுக்கும் அறைகூவல் விடுத்துள்ளார்.

கொழும்பு தொட்டலங்கையில் ஐ.தே.கட்சியின் கூட்டத்தில் வெடித்த குண்டு வெடிப்பை அடுத்து புதியபூமிக்கு அளிதத விஷேட பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவும், ஜனநாயகத்தை மீள நிலைநிறுத்தவும் புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில் தொட்டலங்க குண்டு வெடிப்புக்கு பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இந்நாட்டின் மக்களின் எதிரிகளே. அவர்கள் சமாதானத்தின் எதிரிகளே என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய பிரதமரின் காலஞ்சென்ற கணவரான விஜய குமாரணதுங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மக்கள் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த திரு.வை.பி.டி. சில்வா தற்போது அக்கட்சியின் தலைவராக இருக்கிறார். ஒஸி அபயகுணசேகராவின் தலைமையிலான இலங்கை மக்கள் கட்சி ஐ.தே.கட்சியுடன் இணைந்துள்ளது. வை.பி.டி.சில்வாவின் தலைமையிலான இலங்கை மக்கள் கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஒரு அங்கமாகும்.

புலிகளுடன் பேச்சவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு சென்ற விஜய குமாரணதுங்க தலைமையிலான குழுவில் வை.பி.டி.சில்வாவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் புதியபூமிக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது.

பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் புதிய அணுகுமுறையினாலும் அதற்கு விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமையாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சமாதான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. இதன் மூலம் சமாதானத்துக்கான புதிய சகாப்தம் ஒன்றின் தோற்றத்திற்கான நம்பிக்கையை கொடுத்தது.

சமாதான வழிகளில் தீர்வு காண்பது என்பது மிகவும் இலகுவான காரியமன்று. ஏனெனில் சமாதான முயற்சிகளுக்கு எப்போது முட்டுக்கட்டைகள் இருப்பதும் தவிர்க்கமுடியாதது. அவற்றை வெற்றி கொள்ளாவிட்டால் சமாதானத்தை அடைய முடியாது. ஆயுத விற்பனையில் கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்தவர்கள் நடைபெறும் கொடிய யுத்தத்தை நிறுத்துவதற்கு விரும்பவில்லை. மற்றும் இருதரப்பிலும் இராணுவத் தீர்வையே வற்புறுத்தும் சக்திகள் இல்லாமல் இல்லை.

இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த விருப்பம் கொண்டுள்ளவர்கள் யாவரும் மக்களின் கஷ்டங்களை நன்கு புரிந்தவர்களாவர். நடந்து கொண்டிருக்கும் கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமெனில் யுத்தத்தை தொடர்ந்தும் நடத்தாமல் யுத்தத்தை நிறுத்த வேண்டும். யுத்தத்தினால் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைகளுக்கு முடிவு கட்ட வேண்டும். எமக்கு அமைதி தேவை.

இன்று விஜய குமாரணதுங்க உயிருடன் இருந்திருந்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு பெரிதும் உதவியாக இருந்திருக்கும் ஒரு சிறந்த மனிதாபிமானியான அவர் யாழ்ப்பாணத்துக்கு சென்று விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களும் மனிதாபிமானமான முறையில் நம்பிக்கையுடன் நடந்து கொள்ளும் நம்பிக்கைக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பார்.

பல்லின சமூகங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் இன, மொழி, மத முரண்பாடுகள் நிலவுவது தவிர்க்க முடியாது அந்த முரண்பாடுகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டிய தலையாய கடமை அரசாங்கத்திலிருக்கும் கட்சியிடமே உள்ளது.

எமது நாட்டின் இனமுரண்பாடுகளை தீர்ப்பதில் 1977 இற்கு பிறகு ஆட்சியிலிருந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் நேர்மையான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அவர்கள் காலம் கடத்துவதையே கருத்திற் கொண்டனர்.

கடந்த 11வருடகாலமாக நடைபெறும் யுத்தத்தினால் எம்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதமில்லாமல் போய்விட்டது. உயிரிழப்புகளும், உடமை இழப்புகளும் பெருமளவில் இடம் பெற்றுள்ளன.

இந்த யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள பெரிய நட்டம் யாதெனில் எம்மக்களிடையே மனிதாபிமானம் என்பது இல்லாமல் போனதே ஆகும். முழு சமூகமும் கொடூரமானதாக மாறியுள்ளது. அதை மாற்றி ஒரு நாகரீகமான மனிதாபிமானம் நிறைந்த சமூகத்தை நிலைநிறுத்த வேண்டியது எல்லோருடைய கடமையுமாகும்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று வற்புறுத்திய அவர், தீர்வு முறைகள் எந்த அடிப்படையில் அமைய வேண்டும் என்பது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சியின் கீழ் சிறுபான்மையினங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் வகையில் தீர்வு திட்டங்கள் அமைய வேண்டும். சிறுபான்மையினர் அவர்களது விவகாரங்களை அவர்களே கையாளக் கூடிய திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். சிறுபான்மையினர் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் இந்நாட்டில் வாழ வழி செய்யப்பட வேண்டும். சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் ஆகக்கூடியளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இலங்கை நாடு ஒரு நாடு ஒரு தேசம் என்ற அடிப்படையில் எல்லா இனங்களும் அவற்றின் தன்னடையாளங்களுடன் வாழும் ஒரே தாய்நாடு என்ற அடிப்படையில் தீர்வு திட்டம் அமைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



யாழ் மண்ணெண்ணை வியாபாரி

# யுத்தமா சமாதானமா?

-அ. பூபதி

காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையின் தொழிலாளியான சங்கரப்பிள்ளை சிவலோகநாதன் கூறுகிறார். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது பகுதியில் இடம் பெற்ற ராணுவ நடவடிக்கை காரணமாக தொழிலையும் இழந்து சொந்த வீடு வாசல்களையும் கைவிட்டு சொல்ல முடியாத துன்பங்கள் மத்தியில் இடம் பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றோம். எனது சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே தொழிற்சாலை நிர்வாகம் வழங்கி வருகிறது. இவ்வாறு பெயரளவில் தரப்படும் சம்பளம் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணமும் கூட எமக்குக் கிடைப்பதில்லை. வயதானதாய் தந்தையர்கள் உட்பட ஏழுபேர் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்றப் படும்பாடு விபரிக்க முடியாததொன்றாகும். என்னைப் போன்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் இதே கதி தான், சமாதானமும் இயல்பு வாழ்க்கையும் எப்பொழுது திரும்பும் என்ற ஏக்கத்தோடு தான் ஒவ்வொரு பொழுதையும் கழித்து வருகின்றோம். சமாதானப் பேச்சுவார்த்தை என்றதும் பழைய கதைகள் தான் ஞாபகத்திற்கு வந்தன. இருப்பினும் புதிய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளும் சமாதான தூதுக் குழு வந்து போனதும் ஓரளவு நம்பிக்கையைத் தந்துள்ளது. விரைவில் சமாதான சூழல் வர வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

யாழ்ப்பாணம் நகரப் பாடசாலை ஒன்றின் ஆசிரியரான ஐம்பது வயது மதிக்கத்தக்க கந்தையா சிவசுப்பிரமணியத்திடம் கேட்டபோது, தொடர்ச்சியான யுத்த அழிவுகள் ஏனையவற்றை நாசம் செய்துள்ளது போன்று எமது கல்வியையும் சிதைத்து விட்டது. பாடசாலைக் கட்டிடங்களை தளபாடங்களை அழிவுபடுத்தியுள்ளதுடன் மாணவர்கள் ஆசிரியர்கள் பலரின் உயிர்களையும் பறித்து விட்டது. குறிப்பாக



யாழ் தலைமைத் தபால் காரியாலயம்

மாணவர்களின் உடல், உள வளர்ச்சிகளைக் கெடுத்து கல்வி கற்பதற்கான சகல ஆரோக்கிய நிலைமைகளையும் பாழடித்து விட்டது. ஒட்டு மொத்தத்தில் எமது கல்வி நிலை ஒரு தலைமுறை இடைவெளியினை ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. கடந்த கால அனுபவங்களைத் திரும்பிப் பார்க்கும் போது சமாதானம் என்பது வெறும் பேச்சுடன் நின்று விடுமோ என்றே எண்ணத் தோன்றுகிறது. கடந்த அரசாங்கத்தின் காலத்திலும் சமாதானக் குரல் ஒலிக்காமல் இருந்ததில்லை. அதை உரத்து ஒலித்துக் கொண்டுதான் யுத்த சூழலை வளர்த்துச் சென்றார்கள். ஆனால புதிய ஆட்சியின் போக்கில் சமாதான நாட்டம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதன் தொடக்கம் நம்பிக்கை தருவதாக இருந்த போதிலும் முழு நம்பிக்கை ஏற்பட மேலும் கால அவகாசம் தேவை. நிரந்தர சமாதானத்தையே நாம் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

யாழ் குருநகரைச் சேர்ந்த மீனவரான அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரி என்பவர் கூறுகிறார்;

''எங்களது தொழில் வாழ்க்கை காற்றோடும் கடலோடும் மல்லாடி ஆபத்துக்களுடன் வாழ்வதுதான். ஆனால் அவற்றையும் விட நாளாந்த ஆபத்தாக எம்மை எதிர்நோக்குவது கடற்படையினரதும், இராணுவத்தினரதும் தாக்குதல்களாகும். நாம் தொழிலுக்குக் கடலிலே இறங்கினால் எந்த நேரமும் தாக்குதல்களுக்கு ஆளாகுவோம். சுட்டும் வெட்டியும் படகுகளை மூழ்கடித்தும், எமது உபகரணங்களை அபகரித்தும் செல்லும் நிகழ்வுகள் கடற்பரப்பு எங்கும் நடந்த வண்ணமே இருக்கின்றன. கடலிலே மீனவர் ஒருவர் கொல்லப்படாத அல்லது காணாமல் போகாத நாட்கள் இல்லை என்றே கூற முடியும். கரையில் பட்டினி கிடந்து மெல்ல மெல்லச் சாவதை விட கடலிலே தொழில் செய்து ஏதோ அன்றாடப்பாட்டைப் பார்க்கலாம் என்றே தொழிலுக்குச் சென்று சாக வேண்டியுள்ளது. எனவே சமாதானம் வரவேண்டும். அது விரைவாக வரவேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும். அப்பொழுதுதான் சின்னாபின்னமாகிக் காணப்படும் நமது தொழில் பழைய நிலைக்கு வர முடியும். மீனவ மக்களின் கண்ணீர்க் கதைகளுக்கு முடிவு ஏற்பட முடியும். புதிய அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி சமாதானமாகப் பிரச்சினையைத் தீர்த்தால் ஆண்டவன் நிச்சயம் அவர்களை ஆசீர்வதிப்பார்''.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாயில் வசித்து வரும் கதிர்காமு வேலுப்பிள்ளையிடம் விசாரித்தபோது; ''எனக்கு ஆறு பிள்ளைகள். ஐந்து பேர் பெண்கள். மகன் ஒருவன் மட்டுமே வாழைக்குலை வியாபாரம் செய்து ஏதோ ஒரு மாதிரி சமாளிக்க முடிகிறது. பலாலியில் சொந்தக் கல்வீடும், பதினைந்து பரப்புத் தோட்ட நிலமும் இராணுவத்திடம் பறிகொடுத்து விட்டு வெறும் கையுடன் நான்கு வருடங்களுக்கு முன்பு வெளியேறினோம். எங்கள் செம்மண் தோட்டம் பொன்விளையும் பூமியாகும். எழுபது- எழுபத்தேழு காலகட்டத்தில் தோட்ட வருமானத்திலேயே எங்களில் பலர் கல்வீடு கட்டினோம். இன்று ஒருவேளை சாப்பாட்டிற்கே கஷ்டப்பட வேண்டியுள்ளது. ஒவ்வொரு முறையும் சமாதானம் பற்றிய பேச்சு எழும் போது நாங்கள் எங்களது சொந்த இடத்திற்கு போவது பற்றியே கனவு காண்போம். இதெல்லாம் வெறும் பேச்சாக இருக்கிறதே தவிர நடைமுறையில் சரிவருவதாகத் தெரியவில்லை. என்றாலும் புதிய அரசாங்கம் வந்ததிலும் சில விடயங்களைச் செய்வதிலும் ஓரளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நீண்ட நாள் சென்றால் ஆறிய கஞ்சி பழைய கஞ்சியாகி விடும். விரைவில் சமாதானம் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது இழப்புக்களை ஈடு செய்து பிள்ளைகளை கரை சேர்க்க முடியும்''.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட விரிவுரையாளர் கூறுகின்றார்; ''கடந்த நான்கு வருட யுத்தம் வடக்கு கிழக்கை முற்றாகச் சிதைத்து விட்டது. முன்னைய அரசு பின்பற்றிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கொள்கை மிகமிக மோசமானதாகும். பேரினவாதத்தின் சகல பண்புகளையும் அந்த ஆட்சிக் காலத்திலேயே துல்லியமாகக் காணமுடிந்தது. ஆனால் அதற்கு அடிபணிந்து போகாது விட்டுக் கொடுக்காத போராட்டம் முன்னெடுக்கப்பட்டதினாலேயே இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்னும் புதிய சிந்தனை சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியது. அதன் பிரதிபலிப்பே புதியு ஆட்சி பின்பற்றும் புதிய கொள்கைப் போக்காகும். இன்றைய அரசியல் யதார்த்தம் நடைமுறை வழிகளில் உணரப்படும் சூழல் தோன்றியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதனை இருதரப்பிலும் நன்கு உணர்ந்து புரிந்துணர்வுடன் அணுகி முன்னெடுத்தால் சமாதானம் ஏற்படுவதும், யுத்த சூழல் மறைவதும் அதிக தூரத்தில் இல்லை. பேச்சுவார்த்தை முன்செல்லவும் அரசியல் தீர்வு காண்பதற்கும் இருதரப்பினரும் பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வும் இன்றி இதனை நடைமுறைச் சாத்தியமாக்க முடியாது''.

பதினேழு வயது நிரம்பிய பாடசாலை மாணவரான கமலநாதன் சதீஸ்வரன் என்பவரை சமாதான முயற்சிகள் பற்றிக் கேட்ட போது, ''சும்மா சமாதானம், சமாதானம் என்பதெல்லாம் வெறும் பேச்சுத்தான். இப்படி பேசிப் பேசித்தான் எங்களை அடக்கியும் அழித்தும் வந்தார்கள். இதற்கு ஒரேவழி அடிக்கு அடி கொடுப்பதுதான். திருப்பி அடித்தபடியால்தான் இந்தளவாவது மிஞ்சி இருக்கிறோம். எங்களது வயதையொத்த எத்தனை இளம் தளிர்கள் தமது வாழ்வை அர்ப்பணித்து விட்டனர். எனவே சமாதானம் என்ற மாயவலையில் சிக்குப்படாமல் இறுதி வரை போராடுவது தான் சரியான பாதையாகும்''

வடமராட்சி கரணவாய்யைச் சேர்ந்த விவசாயியான கணபதிப்பிள்ளை தங்கராசாவிடம் வினவியபோது முன்பு எல்லாம் விவசாயம் ஒரு முழுநேர முயற்சியாகவே செய்து வந்தோம். எங்களது சகல வாழ்க்கைத் தேவைகளுக்கும் அதனையே ஆதாரமாக நம்பி இருந்தோம். திட்டமிட்டே வருமானத்தை பெற்று வீடுகளைக் கூடக் கட்டி எழுப்பினோம். இன்று விவசாயம் முற்றாகவே அழிந்த நிலையில் நூற்றுக்கணக்கான பரப்பு நிலங்கள் வெறும் கட்டாந்தரைகளாக இருந்து வருகின்றன. மின்சாரம், எரிபொருள், பசளை போன்றவற்றுக்கான தடைகளும், போக்குவரத்துச் சீர்குலைவால் சந்தைப்படுத்த முடியாமையும் விவசாயத்தை நம்ப முடியாத நிலையில் தவிக்க வேண்டியுள்ளது. எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு சமாதானம் மிகமிக அவசியம். ஆனால் அது வெறும் சலுகைகளாகவும், தற்காலிகமானதாகவும் இருக்கக் கூடாது. எனவே சிறிது காலம் எடுத்தாலும் உறுதியான அடிப்படையில் சமாதானம் ஏற்பட்டு நிரந்தரமாகவே யுத்த சூழல் மறைய வேண்டும். அதனையே நாங்கள் வேண்டுகின்றோம்''.

சத்தியமூர்த்தி சசிகரன் ஓர் அரசியல் விஞ்ஞானத்துறைப் பட்டதாரி. பல்கலைக் கழகப் படிப்பை முடித்த அவர் வேலை தேடிக் கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்டபோது, யுத்தம் என்பது பிரச்சினைகளின் தீர்வுக்கான ஓர் உயர்ந்த நிலைக் கருவி மட்டுமே அன்றி அது என்றும் நிரந்தரமாகச் சமூக வாழ்வியக்கத்தில் இருக்க வேண்டியதொன்றல்ல. யுத்தம் ஒன்று இருந்தால் நிச்சயம் சமாதானமும் வந்தே ஆக வேண்டும். அது முந்தியோ அன்றிப் பிந்தியோ வந்தே தீர வேண்டும். யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் குறிப்பாகப் புதிய ஆட்சியினரையும் பரிசீலனை செய்தால் இன்றைய சூழல் சமாதானத்திற்கான வாய்ப்புகள் விருத்தி பெற்றுச் செல்லும் என்ற நம்பிக்கையைத் தான் தந்துள்ளது. இம்முறை சமாதான முயற்சி பழைய நிலை போன்றதாக அமைந்து விடாது போல் காணப்படுகிறது. காரணம் அதன் ஆரம்பம் சரியான இடத்தில் இருந்து தொடங்கப்பட்டுளமையாகும். ஆரம்ப நிலையை அடுத்து பாதை திறப்பு, யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வுக்கான யோசனைகள் என்ற விதமாக முன்னேறினால் நிச்சயம் சமாதானம் ஏற்பட முடியும்''.

சுந்தரம் அற்புதராசா என்ற மண்ணெண்னை வியாபாரியிடம் கதைத்த போது, ''சும்மா சமாதானம், சமாதானம் என்று சொல்லப்படுகிறதே தவிர அது சரிவரப் பேற விஷயமில்லை. ஏதோ சனங்கள் எல்லாம் செத்தே போச்சு. யுத்தம் நடந்தாலும் சீவிச்சுக் கொண்டுதானே இருக்குதுகள். பொடியள் லேசிலை சம்மதிக்க மாட்டாங்கள். புதிய அரசாங்கமும் ஏமாற்றத் தொடங்கி விட்டார்கள். பேப்பர் காரருக்கும் வேற வேலை இல்லை. சமாதானம் வரப்போகுது என்று எழுத, சனங்களும் அங்கலாய்த்துக் கொண்டு திரியுதுகள்''. (யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு லீட்டர் மண்ணெண்ணையின் விலை லீற்றர் 36ரூபா. சிறு சம்பவம் என்றால் ஐம்பது ரூபாவைத் தாண்டிவிடும். அதுவும் கலப்படம் செய்யப்பட்டே விற்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை வாங்கிச் சென்று விற்பனை செய்யும் தர்மலிங்கம் சிவநேசன் என்பவரிடம் கேட்டபோது; ''இப்போதைக்கு எதுவும் நடக்காது. பாதை திறப்பு வீண்கதைதான். அப்படித் திறந்தாலும் பொருட்களின் விலைகளும் குறையாது:

→ 11

www.padippakam.com



# வாசகர் அரங்கு



## தமிழ் மக்களுக்கு...

தமிழ் மக்கள் சிறிதளவாவது மூச்சு விடுவதற்கும், பொதுவாக ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் வாயை திறந்து பேசுவதற்கும் பெருமூச்சு விடுவதற்கும் நல்லதொரு வாய்ப்பை நடந்து முடிந்த தேர்தல் வழிவகை செய்து கொடுத்துள்ளது.

கடந்த நாற்பத்தி ஐந்து வருடகால இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் தமிழ் சமூகத்தின் தலைவிதியை தன் கையில் வைத்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த தமிழ் தலைவர்களின் வர்க்க குணாம்சங்களை தமிழ் மக்கள் மத்தியில் சரியாக எடுத்து வைக்காமையும், விமர்சனத்திற்கு ஆளாக்காமையுமே தென் இலங்கையில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட ஏகாதிபத்திய யூ.என்.பி பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக சிங்கள மக்கள் நடத்திய போராட்டங்களின் போதும் கிளர்ச்சிகளின் போதும் இந்த தேசிய அரசியல் அலைகளிலிருந்து தமிழ் மக்களை தனிமைப்படுத்தியதற்கு முக்கிய காரணமாகும்.

யாழ் சமூகத்திலும், கிழக்கு மாகாண மக்கள் மத்தியிலும் தோன்றிய தமிழ் தலைமை, தனது வர்க்க குணாம்சத்தை மறைத்துக் கொள்ள சைவத்தையும், தமிழையும் தனது போர்வையாக போர்த்துக் கொண்டது. தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக ஊறிப்போன ஆன்மீக சிந்தனையும், அதற்கு உடந்தையாக காணப்பட்ட சில மூட நம்பிக்கைகளும் இதற்கு உதவி செய்தன. சில பண்டிதர்கள் இதற்கு உறுதுணையாக நின்று இதுவே நமது பண்பாடு, கலை, கலாச்சாரம் என்று கூறி தமிழ் மக்களை திணறடித்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழ் பிற்போக்கு வர்க்கத்தலைமை வட-கிழக்கில் இருந்த இடதுசாரி முற்போக்கு இயக்கங்களையும், அதன் நல்லெண்ணம் கொண்ட ஜனநாயக சிந்தனையாளர்களையும், அங்குள்ள ஒதுக்கப்பட்ட சிறுபான்மை சமூகத்தின் (நளவர்) கட்சியாளர்கள் என்று பெயர் சூட்டி மக்களிடையில் ஏற்படவிருந்த சமூக விஞ்ஞான அரசியல் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி உயர் மட்ட புத்தி ஜீவிகளைத் திசை திருப்பிவிட்டு இனவெறியூட்டலை, வளர்த்துக் கொள்ள முயற்சி செய்து வெற்றிகண்டனர்.

மலைநாட்டுத் தொழிலாளர்களிடையில் தொழிலாளர் வர்க்க உணர்வு கொண்ட அரசியல் தொழிற்சங்க வளர்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டது. அன்றைய இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமை இந்திய தேசிய காங்கிரஸ் கொடியையும், காந்தி நேரு உருவங்களையும் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வந்த சாதி அமைப்பையும் கிராமிய குல தெய்வங்கள் அதன் வடிவங்களையும், தமிழ் கலாச்சாரம் என்கிற போர்வையால் மூடி சிங்கள மக்களோடு ஒன்று சேர்வதை தடுத்து சிங்கள மக்கள் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களிலிருந்து மலையக மக்களை ஒதுக்கி வைத்தது.

தமிழ் சமூகத்தின் இந்த பிற்போக்கான தலைமையை சிங்களப் பகுதியிலுள்ள பௌத்த பிற்போக்குத் தலைமையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிவருடிக் கட்சியான யூ.என்.பியும் சரியாகவே பிரயோசனப்படுத்திக் கொண்டன.

ஆங்கில மொழியின் மூலம் தனது சமூக அந்தஸ்தையும், பொருளாதார மேம்பாட்டையும் அடைந்திருந்த தமிழ், சிங்கள தலைமையானது தங்களது இந்த அந்தஸ்து கீழே இறக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அதனைக் கடந்த நாற்பத்தி ஐந்து வருடகால (1947-1994) யூ.என்.பியினதும் அதன் கூட்டாளி கட்சிகளினதும் தந்திரோபாயங்களை கொண்டு அறிய முடியும்.

கடந்த கால தேசிய அரசியல் நீரோட்டத்தில் ஏற்பட்ட சில முற்போக்கான போராட்டங்களில் தமிழ் மக்களை பங்கேற்கவிடாமல் தடுத்தமையை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

தொழிலாளர் வர்க்க விரோத யூ.என்.பி கடந்த 45 வருடகாலமாக தோட்ட தொழிலாளி வர்க்கத்தை இனவாரியாகவும், வர்க்க ரீதியாகவும், கடுமையாக எதிர்த்ததன் மூலம் மலைநாட்டு சிங்களவர்கள் மத்தியில் தனது அரசியல் உறுதிப்பாட்டை வளர்த்துக் கொண்டது.

அன்றைய தோட்டச் சொந்தக்காரர்களாயிருந்த ஆங்கிலேய வெள்ளை முதலாளிகளை எதிர்த்து இடதுசாரிகள் போராடியபோது மலைநாட்டு பௌத்த சிங்களவர்களை தூண்டிவிட்டு ''எங்களது நிலங்களை இந்திய தமிழ் தொழிலாளர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள்'' என்ற கோஷத்தை பிற்போக்கு யூ.என்.பி அவர்கள் முன் வைத்து உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை வளரவிடாது தடுத்தது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த யூ.என்.பிக்கு எதிராகவும், பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும் (ஆங்கில மொழி எதிர்ப்பினுக்கூடாக) மொழிப்பிரச்சினையை முன்வைத்து சிங்கள மக்கள் நடத்திய பிரமாண்டமான கிளர்ச்சிப் போராட்டங்களிலிருந்தும் தமிழ் மக்களை திசை திருப்பி சகோதர சிங்கள மொழிக்கு எதிராக தமிழர்களைத் தூண்டி தமிழ் மக்களது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வையும், தமிழ் தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வையும் மழுங்கடித்து பிற்போக்கு சக்திகளின் கையாட்களாக தமிழ் சமூகத்தை மண்டியிட வைத்தது தமிழ்த்தலைமை.

தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவ்வவ் கால கட்டங்களில் நடந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் மத்தியில் யூ.என்.பி எதிர்ப்பை பேசி அதேவேளை தெற்கேயுள்ள இடதுசாரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சகல கட்சிகளையும், பேரினவாதக் கட்சிகள் என்றும் கூறி தமிழ் இனவாதத்தைக் கிளப்பி, தேர்தலில் வெற்றியடைந்தபின் பேரினவாத கட்சியான யூ.என்.பியோடு ஒன்று சேர்ந்தன தமிழ் தலைமைகள். யூ.என்.பியின் அரை மந்திரிகளாகவும், முழு மந்திரியாகவும் கொழும்பிலிருந்து கொண்டே செயற்பட்டன தமிழ் தலைமைகள்.

1977க்குப் பின் வடக்கிலும் கிழக்கிலும் யுத்தங்களையும் அழிவுகளையும் மேற்கொண்டு தமிழ் மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக நினைத்து அவர்களை பயமுறுத்தி அவமானப்படுத்தியது, யூ.என்.பி. இளம் தமிழ் தலைமுறையை பொலிஸிலும், இராணுவத்தின் முன்னும் மண்டியிட வைத்தும், வெளிநாடுகளுக்கு ஓட வைத்தும் அகதிகளாக்கி கோழைகளாக்கி குற்றுயிராக்கியது யூ.என்.பி.

1953 ஹர்த்தால் போராட்டம், 56ல் நடைபெற்ற வெள்ளையர்களுக்குச் சொந்தமான உடமைகளை தேசிய மாக்கல் போன்ற பல முற்போக்கு நிகழ்வுகளில் இருந்தும் தமிழ் மக்களை ஒதுக்கி வைத்தது தமிழ் தலைமை. அதன் காரணத்தாலும் கடந்த பத்து வருடங்களாக யூ.என்.பி அரசினால் தமிழ் மக்களின் பால் நடத்தப்பட்ட கொடுமையான அடக்கு முறைகளுக்கும் இனவாதப் போராட்டங்களுக்கும் எதிராக சிங்கள மக்களைத் திரட்டி தங்களது சகோதர மக்களை ஆதரித்து போராட முடியாமல் சிங்கள முற்போக்கு சக்திகள் சில காலம் பின்வாங்க நேரிட்டது. இது ஒரு தற்காலிக நிகழ்வாகவே இருந்தது.

ஆனால் கடந்த கால வன்செயல் காலங்களுக்குப் பின் தமிழர்களிடையில் தமிழர்கள் ஐக்கியத்தைப் பற்றித் திண்ணைப் பேச்சு பேசிக் கொண்டிருந்த காலங்களில் சிங்களவர்கள் மத்தியிலும் பௌத்தர்கள் என்று கூறி வகுப்பு வாதம் பேசியவர்களிடையிலும் முற்போக்காளர்கள் இடதுசாரிகள் ஜனநாயகத்தை விரும்பிய நல்லெண்ணம் படைத்த புத்திஜீவிகள் கல்விமான்கள் கடுமையாக் வேலை செய்தனர்.

ராவய, எத்த, யுக்திய போன்ற பத்திரிகைகளிலும் மனித உரிமை கோரும் குழுக்களும், அவர்களது பத்திரிகைகளும், கடந்த தேர்தலின் போது பயமின்றி தமிழ் மக்களது உரிமைகள் சம்பந்தமாக சிங்களவர்களிடையில் பிரசாரம் செய்தன. இத்தேர்தலில் பொ.ஜ.ஐ. முன்னணிக்கு கிடைத்த வெற்றி இனவாதத்திற்கு சிங்கள மக்கள் கொடுத்த பலத்த அடியாகவே கொள்ளல் வேண்டும்.

மீண்டும் பேரினவாத யூ.என்.பியை எழுந்து நடக்கவிடாமல் அதற்கு எதிராக சிங்கள மக்கள் நடத்தும் போராட்டங்களில் தமிழ் மக்களின் பங்களிப்பை தமிழ் தலைமை தடுத்து நிறுத்திவிட முடியாது என்று நம்புவோமாக.

அ. மரியதாஸ்

கொழும்பு.

## யூ.என்.பி இறந்துவிட்டதா?

பொ.ஜ.ஐ. முன்னணி பதவியேற்றுள்ள இந்த வேளையில் காலஞ்சென்ற முன்னாள் பருத்தித்துறை எம்.பி பொன். கந்தையா (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி) 1956 ஆம் ஆண்டு தேர்தலில் யூ.என்.பி தோல்வியுற்றது பற்றி தெரிவித்த கருத்து இங்கு நினைவு கூர்வது பெறுமதியானதாகும்.

அவர் எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட பிறகு கொழும்பு கொச்சிக்கடையில் கம்யூனிஸ்ட் கட்சி கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு கூட்டத்தில் பேசியபோது அவர் பின்வருமாறு கூறினார்.

'யூ.என்.பி செத்து விட்டதாக லங்கா சமசமாஜக் கட்சி உட்பட பல இடதுசாரிகளும் கூறி வருகின்றனர். அது தவறானது. தேர்தலின் தோல்வியினால் யூ.என்.பி என்ற விஷப்பாம்பின் தலையில் இலேசான அடிபட்டுள்ளது. அந்த அடியினால் அது புற்றரையில் மயக்க நிலையில் கிடக்கிறது' அதன் மீது குளிர்காற்று வீச வீச மயக்கம் தெளிந்து எழுந்து அதனது விஷத்தை மீண்டும் அதுக்கக் தொடங்கும். அதைத் தடுக்க வேண்டுமானால், அது மீண்டம் உயிர்பெற்று எழுந்து வந்து விஷத்தை கக்கவிடாமல் தடுக்க வேண்டுமானால் அதன் மீது குளிர்காற்று வீச விடாமல் தடுக்க வேண்டும்.

யூ.என்.பிக்கு உயிர் கொடுக்க கூடிய அதனை உயிர்வாழ வைக்க கூடிய குளிர்காற்று என்பது என்ன என்பதை அடையாளம் கண்டு அதனை இல்லாமல் செய்ய வேண்டும்.

அதுதான் இந்நாட்டில் இருக்கும் ஏகாதிபத்திய பிடியாகும். இங்கு வாழும் சமூகங்களிடையே ஒற்றுமையின்மையுமாகம்.

எமது நாட்டை ஏகாதிபத்திய பிடியிலிருந்து முற்றாக விடுவித்து பூரண தேசிய விடுதலையை பெற வேண்டும். இந்நாட்டில் வாழும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த வேண்டும். இவை இரண்டும் செய்யப்பட்டால்தான் யூ.என்.பிக்கு உண்மையான மரணம் ஏற்படும்.

இல்லாவிட்டால் யூ.என்.பி உயிர் வாழ்ந்து கொண்டேதான் இருக்கும் ''

பொன் கந்தையாவின் அறிவுரை எவ்வளவு உண்மையானது என்பதை வரலாறு நிரூபித்துவிட்டது. 1956 தோல்வியுடன் யூ.என்.பி இறந்து விடவில்லை. 1970 தோல்வியிலும் கூட இறந்து விடவில்லை. 1977-1994 காலகட்டத்தில் யூ.என்.பி மேற்கொண்ட மக்கள் விரோத நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ளப்படாமலிருக்க, யூ.என்.பி மீண்டும் அரசாங்கம் அமைக்காதிருக்க பொன். கந்தையாவின் அறிவுரையை பொ. ஜ.ஐ. முன்னணியும் இந்நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்வது அவசியமாகம்.

கே. செல்வம்

கொச்சிக்கடை

கொழும்பு

படிப்பகம்

www.padippakam.com

## யுத்தமா .....

சனங்கள் சமாதானம், பாதை திறப்பு என்று விசர்க்கதை கதைக்குதுகள். ஒரு வருஷம், இரண்டு வருஷம் சென்றாலும் ஒன்றும் சரிவராது''.

சைக்கிளில் முப்பது நாற்பது மைல்களுக்கு அப்பால் சென்று விறகு கட்டி விற்பனை செய்யும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த கணபதி இராசையா என்ற குடும்பஸ்தரைச் சந்தித்துக் கேட்டபோது, ''சமாதானம் வரக்கூடாது என்று எங்களைப் போன்ற எவர்தான் விரும்புவார்கள். என்னுடைய கோலத்தைப் பாருங்கள். எனக்கு நாற்பது வயதாகிறது. ஆனால் அறுபது வயதுக்காரன் போல் ஆகி விட்டேன். நான் ஒரு கைதேர்ந்த மேசனாக இருந்தேன். யுத்தம் தொடங்கியதும் தொழிலை இழந்து ஓட்டாண்டி ஆகினேன். ஆறு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தைக் கொண்டு நடாத்த வேண்டி விறகு கட்டி இழுத்து விறகோடு விறகாக மாறிவிட்டேன். ஒரு முறை விறகு கட்டி வந்து விற்றால் ஒரு நூறு ரூபாய் தான் மிஞ்சும். ஒவ்வொரு நாளும் அப்படிச் சென்று வரமுடியாது. கட்டாயம் சமாதானம் வந்தே ஆகவேண்டும். எம்மைப் போன்ற சாதாரண மக்களால் இனிமேலும் யுத்த சூழலையும் வாழ்க்கைக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்ள முடியாது. தொடங்கப் பட்டுள்ள சமாதான முயற்சிகள் தக்கபடி முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். அதன் வழியில் நல்ல முடிவு ஏற்பட வேண்டும்''.

தனது இளைப்பாறும் காலத்திற்கு முன்பாகவே அரசாங்க உத்யோகத்தில் இருந்து இளைப்பாறியவரும் ஒரு நடுநிலை அரசியல் அவதானியாகவும் கணிக்கப்படும் முருகுப்பிள்ளை சத்தியசீலன் என்பவரைச் சந்தித்துக் கேட்டபோது அவர் கூறினார். சமாதானத்திற்கான நல்ல சூழல் கனிந்துள்ளது. இது இங்கு மட்டுமல்லாது தெற்கிலும் சிங்கள மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு வளர்ந்து வருகின்றது. இத்தகைய நல்ல சூழலைக் கெடுக்கவும் முயற்சிகள் நடைபெறத் தான் செய்யும். இருப்பினும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் உறுதியாக இருப்பின் உரிய இலக்கை அடைய முடியும். இன்றைய சமாதான முயற்சியில் பல நல்ல அம்சங்கள் தெரிகின்றன. குறிப்பாக அரசாங்கமும், புலிகள் இயக்கமும் நேரடியாகவும், நிபந்தனைகள் இன்றியும் பேசுவதுடன் பேச்சுவார்த்தை பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தியும் வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும். எந்தத் தரப்பினரும் தத்தமது நிலைப்பாட்டிற்காக மக்களுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டிய கடப்பாட்டினையும் பெற்றிருக்கிறார்கள்''.

இத்தகைய நல்ல சூழலிலும் நம்மவர்கள் மத்தியில் சமாதானத்தை மனப்பூர்வமாகவே விரும்பாதவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை நூற்றுக்கு ஒரு வீதமாக மட்டுமே கணக்கிட முடியும். கடந்த நான்கு வருட யுத்த சூழலில் கொள்ளை லாபம் ஈட்டிப் பெரும் பணம் சம்பாதித்துக் கொண்டவர்களும், சுயநலவாதிகளும் மக்கள் மீது குதிரைச்



சவாரி செய்து ருசி கண்டவர்களும் சமாதானத்தை வேப்பெண்ணையாகவே கருதுகிறார்கள் என்பது உண்மையே. இந்த ஒரு வீதத்தினருக்காக 99 வீதமான மக்களின் சமாதான விருப்பம் நிறைவேறாமலா போய்விடும். சமாதானம் பற்றிய முக்கியமான விடயம் யாதெனில் பொருளாதாரத் தடை நீக்கம், மின்சாரம் மற்றும் புனரமைப்பு வேலைகள், பாதை திறப்பு என்பவை தான் சமாதானத்திற்கான ஒரே முயற்சிகள் என்று அரசாங்கம் கருதி அவற்றை நோக்கி மட்டும் செயற்பட்டால், அது தப்புக் கணக்காக ஆகிவிடும். இவை யாவும் மக்கள் முன்பு தங்குதடையின்றி அனுபவித்தவைகளே. அன்றிப் புதிய சலுகைகளோ அன்றி உரிமைகளோ அல்ல என்பது அரசாங்கத் தரப்பில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அவற்றுக்கு அப்பாலும் யுத்த நிறுத்தம், தீர்வுக்கான திட்ட யோசனைகள் என்னும் பாதையில் நீண்ட தூரம் போக வேண்டும். வடபகுதி மக்கள் தமது சமாதானத்திற்கான பெரு விருப்பினை ஏற்கனவே மிகத் தெளிவுடன் எடுத்துக் காட்டி விட்டனர். தொடரும் நிகழ்வுகளை இருந்து அவதானிப்போம்.

## காமினி

நிகழ்வுகள் ஆகின. அந்த வழியில் அரச படைகளாலும் அவற்றுக்கு அப்பாற்பட்ட குண்டர்களாலும் கொலைக் கலாசாரம் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப் பட்டன. வடக்கில் 'பயங்கரவாதத்தை ஒழிக்கவும் தெற்கில் நாசகார சக்திகளை அடக்கவும் இக் கொலை வழிப் பயணம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் பல் ஆயிரக் கணக்கான மக்கள் புடுகொலைகளுக்கும், காணமால் போவதற்கும் ஆளாகினர். இத்தகைய இருண்ட ஆட்சிக் காலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளேயாவர். மேற் கூறியவற்றுக்கும் காமினிக்கும் ஒட்டுமில்லை உறவும் இல்லை என்பதாக இருக்க முடியாது. காமினியின் இடைக்கால வெளியேற்றம் கூட தலைமைத்துவம் பற்றியதே அன்றி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் கொடுமைகள் பற்றியதல்ல.

ஆதலால் கடந்த காலத்தின் 'கொ[illegible] ளால் பழிக்குப் பழிவாங்கும் மனநிலைகளும் பதவிகளை தட்டிப் பறிக்கும் போக்குகளும் எதிர்காலத்தில் ஆபத்துக்கள் வந்திடுமோ என்ற அச்சங்களும் நிலவி வந்தன.

இவை ஒவ்வொன்றிக்கும் பல்வேறு பின்னணிகளும் இருந்து வந்தன. இத்தகைய பின்னணிகளில் இனப்பிரச்சினையும் ஒரு வலுவான' காரணிகளில் ஒன்றாகும். இதனை உணர்த்தும் வகையில் காமினியின் இறுதிச் சடங்கின் போது உரையாற்றிய அமைச்சர் எஸ்.தொண்டமான் இலங்கையில் இனங்கள் சமத்துவமாக நடத்தப்பட்டிருந்தால் இத்தகைய துர்திஷ்ட சம்பவம் திகழ்ந்திருக்க முடியாது என்று கூறி இருந்தமை கவனத்திற்குரியதாகும்.

எனவே தத்தமது அரசியல் லாப நோக்குக்கு இசைவான பின்னணிகளை வலிந்து தேடி கொள்ள முயலாது அடிப்படையான காரணிகளை கண்டறிந்து அவற்றுக்[illegible]

காண முயல வேண்டும். இது போன்று ஒவ்வொரு காரணியும் உரியபடி கண்டறியப்பட்டு தீர்வுகள் குறைந்தபட்சமாவது சாத்தியமாக்கப்படும் போது தான் அரசியல் படுகொலைகள் என்பது அரங்கில் இருந்து அகற்றப்பட முடியும். ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் நேசிக்கும் அனைவரினதும் உடனடிக் கடமை இனப்பிரச்சினைக்குப் பேச்சவார்தையும் அதன் மூலம் நியாயமான தீர்வை எட்டக் கூடிய வகையிலான முயற்சிகளுக்குப் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதேயாகும்.

## இந்தியா பங்களிக்குமா......

கும் வல்லாண்மை போக்கினை இந்தியா கொண்டுள்ளமை இரகசியமல்ல.

மேற்படி மேலாதிக்கப் போக்கினை இலங்கை நாட்டின் மீது பிரயோகிக்கும் நேரடிச் செயல் முறையினை எண்பதுகளின் ஆரம்பத்துடன் இந்தியா மேற்கொள்ள ஆரம்பித்தது. அதற்கு உகந்த கருவியாக இனப்பிரச்சினையினைப் பயன்படுத்திக் கொண்டது. தமிழ்த் தலைவர்களில் மிதவாதிகளும் பின்வந்த தீவிரவாத இளைஞர் தலைமைகளும் இந்திய ஆளும் வர்க்கம் விரித்த வலையில் இறுக்கமாக மாட்டிக் கொண்டனர். அந்த வலையில் இருந்து குறிப்பிட்ட காலத்தில் புலிகள் இயக்கம் மட்டுமே தன்னை விடுவித்துக் கொண்டது. இனப்பிரச்சினையில் நண்பன் போல் புகுந்து கொண்ட இந்தியா நாளடைவில் தனது பகைவன் நிலையினைத் தெளிவாகக் காட்டிக் கொண்டது, அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் கொடூர ஆட்சிக்குப் பகைவன் போல் நடந்து கொண்டே இந்தியா விரைவிலேயே அந்த ஆட்சியின் நண்பனாகிக் கொண்டது. அதன் விளைவினை இலங்கை மக்கள் குறிப்பாக தமிழர்கள் அனைவருமே மோசமான வழிகளில் அனுபவிக்க நேர்ந்தது.

இந்திய மேலாதிக்கத்தின் உள்நோக்கங்களுக்கு இசைவு காட்டி அவர்களது சொற்படி நடக்க மறுத்த காரணத்தினால் புலிகள் இயக்கத்தைப் புறக்கணித்து அதனை அடியோடு இல்லாதொழிக்கும் பெருமுயற்சியில் இந்தியா இறங்கியது, அதனால் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கவும் கொடுமைகள் புரியவும் முடிந்ததே தவிர புலிகள் இயக்கத்தை ஒடுக்க முடியவில்லை. ஒரு நாட்டு மக்களை மற்றொரு நாடு வல்லாதிக்கம் செய்ய முடியாது எனும் அடிப்படையில் இந்தியா இலங்கையில் இருந்து கசப்பான பாடங்களுடன் வெளியேறிச் சென்றது. படைகள் சென்றாலும் அதன் பகைநிலை மாறவில்லை. பழி தீர்க்கத் தருணம் பார்த்த வண்ணமே இருக்கின்றது இந்தியா. ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து இந்தியாவிற்கு புலிகள் மீதான வன்மம் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

சகல வல்லாண்மையும் கொண்ட தன்னால் தீர்க்க முடியாத இலங்கையின் இனப் பிரச்சினையை அந்நாட்டின் அரசும் புலிகளும் ஏனையோரும் தீர்த்துக் கொள்வதை இந்தியாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தன்னை எதிர்த்து உதாசீனப்படுத்தி மேலாதிக்க ஆணைக்கு அடிபணிய மறுத்த புலிகள் இயக்கத்துடன் என்ன பேச்சு வார்த்தை என்ற தொனியிலேயே அதன் உள்ளார்ந்த மறைமுக செயல்பாடுகள் அமைந்து வருவதாக அறிய முடிகின்றது. எனவேதான் இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பாதையில் பல பத்துத் தடைகள் உள் நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் போடப்பட்டு வருகின்றன. இவற்றை எல்லாம் தாண்டி பேச்சுவார்த்தை இறுதியான அரசியல் தீர்வு வடிவம் பெறுவதற்கு இன்னும் பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது என்பது பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இரு தரப்பினராலும் ஆழமாக உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இந்தியா இலங்கையின் மிக நெருக்கமான அயல் நாடு, நமது நாட்டின் இன மொழி கலாச்சார வாழ்வின் பல்வேறு கூறுகளுக்கும் இந்திய மூலம் முக்கியமானவை என்பது மறுப்பதற்குரிய தொன்றல்ல. இந்தியாவின் தென்பகுதியில் ஐந்து கோடி சனத்தொகையைக் கொண்ட தமிழர் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அவர்களுக்குமிடையிலான ஆகக் குறைந்த நீர்ப்பரப்பு இடைவெளி இருபது - முப்பது கிலோ மீற்றர்கள் மட்டுமே. இக் காரணங்களினால் இலங்கையின் இனப்பிரச்சினையில் நேர்மையான அக்கறை கொள்வதற்கு இந்தியாவிற்கு உரிமை உண்டு என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் பிரச்சினையில் தலையிட்ட இந்தியா தனது நலனை உள்நோக்காகக் கொண்டு அப்பம் பிரித்து கொடுக்க முற்பட்ட குரங்கு போல் நடந்து கொண்ட செயலே கண்டனத்திற்கும் எதிர்ப்புக்கும் உரியதாகும். இத்தனைக்குப் பின்பும் இந்திய ஆளும் வர்க்கமும் அதன் கருவியான 'றோ'வும் தமது உள்நோக்கப் பாதையில் தொடர்ந்தும் செல்பட்ட வண்ணமே இருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவும் ஒரு தரப்பாக இருக்க வேண்டிய நிலை காணப்பட்டது உண்மையே. ஆனால் தனது நேர்மையீனத்தாலும், தவறான உள்நோக்கப் போக்கினாலும் தமிழ் மக்களின் நம்பகத்தன்மையை இந்தியா இழந்து கொண்டது. இன்று இந்தியா இன்றியே நமது நாட்டின் எல்லைக்குள்ளேயே சம்பந்தப்பட்ட மக்கள் சார்பாகவும் நேரடியாகவும் பேசித்தீர்க்க வேண்டும் என்னும் புதிய சூழல் தோன்றியுள்ளது. இது இலங்கை மக்களின் அபிலாஷையாகவும் வற்புறுத்தலாகவும் காணப்படுகின்றது. எனவே சொந்த நாட்டு மக்களான சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் என்போரின் சமாதானத்திற்கான பெரு விருப்பை நிறைவேற்றும் கடப்பாட்டிற்கு அரசாங்கமும் புலிகள் இயக்கமும் முதன்மை அளித்து வருவது வரவேற்கத்தக்கதே. இதனை இந்தியா எவ்வகையிலும் குழப்பாது தீர்வுக்கு உதவுமானால் நண்பனாக விளங்க முடியும். அதை விடுத்து நேரடியாகவும், மறைமுகமாகவும் குழப்ப முற்பட்டால் பகைவனாக இருக்கவே நேரிடும். இப் பகைவன் நிலைப்பாட்டை இலங்கை மக்கள் மட்டுமன்றி இந்திய மக்களும் எதிர்க்கவே செய்வார்கள் என்பது நிச்சயமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com


# புதிய பூமி

PUTHIYAPOOMI

පුදිය පුමි


## கார்த்திகேயனை அழைப்பது

## சமாதான முயற்சிகளைக் குழப்பவா?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான விசாரணைகளை நடாத்திய இந்திய மத்திய புலனாய்வு பணியகத்தின் (சி.பி.ஐ) விஷேட விசாரணைக் குழுவின் தமிழக தலைவரான உயர் பொலிஸ் அதிகாரி டி.ஆர்.கார்த்திகேயனையும் ஓய்வு பெற்று பகுப்பாய்வு இயக்குனர் பேராசிரியர் பி.சந்திரசேகரனையும் முன்னாள் எதிர்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சி ஜனாதிபதி அபேட்சகருமான காமினி திசாநாயக்கவின் கொலை விசாரணைக்களுக்கு உதவ இலங்கைக்கு வரவழைக்குமாறு அவரின் விதவை மனைவி சிறிமா திசாநாயக்க பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவை கேட்டிருக்கிறார்.

கொலை தொடர்பாக வெளிநாட்டு விசாரணைக் குழுவினரை அழைக்க வேண்டுமென திருமதி திசாநாயக்க விரும்பினால் அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யும் என்று பிரதமர் சந்திரிகா கூறியிருந்தது தெரிந்ததே.

பிரதமர் கேட்ட போது வெளிநாட்டு. புலனாய்வு குழுவினரின் உதவி தேவை இல்லை என்றும் எமது நாட்டு புலனாய்வு குழுவினரில் பூரண நம்பிக்கை இருக்கிறது என்றும் திருமதி திசாநாயக்க கூறினார். இப்போது அதனை கேட்டிருக்கிறார், அதுவும் இந்திய விசாரணைக்குழுவினரை அழைக்கும்படி கேட்டுள்ளார். இதில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை குழப்பும் உள்நோக்கம் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவ்விடயத்தில் சட்டரீதியாகவும் தேசியரீதியாகவும் பல பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்றே இலங்கையின் சட்டத்தரணிகளும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு புலனாய்வு குழுவினரை வரவழைக்கும்படி கோருவதன் அடிப்படை உள்நாட்டு புலனாய்வுப் பிரிவினர் பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்த மாட்டார்கள் என்ற சந்தேகமாக இருக்க முடியும்.

ஆனால் அதேவேளை சந்தேக நபர் மீது பிழையான எண்ணம் கொண்ட அல்லது சந்தேக நபரே அக்குற்றத்தை செய்திருப்பார் என்ற முடிவுக்கு வந்துள்ள ஒருவர் இவ்வாறான வழக்குகள் புலன் விசாரணைகளை நடத்துவது எந்தளவுக்கு நியாயமானதாக இருக்கமுடியும்.

காமினியின் கொலையில் விடுதலைப் புலிகளை முக்கியமாக சந்தேகிக்கப்படுகின்றது. இந்தியா விடுதலைப்புலிகள் மீது வெறுப்பு கொண்டுள்ளது. இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது இடையூறாக விடுதலைப்புலிகள் நடந்து கொண்டது என்பதனாலும் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்தது புலிகளே என்று இந்திய முடிவு செய்ததாலும் புலிகள் மீது இந்தியா வெறுப்பு கொண்டுள்ளது.

திருமதி திசாநாயக்க வரவழைக்க வேண்டுமென்று விரும்புகின்ற கார்த்திகேயன் தலைமையிலான இந்திய புலனாய்வு குழுவினர் ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணைகளை மேற்கொண்டது என்பதால் அக்குழுவிற்கும் புலிகள் மீது வெறுப்புக் கொண்டே இருக்கும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில் இடம்பெற்ற மேற்படி கொலையினால் சமாதான முயற்சிகளை குழப்பிவிடக் கூடும் என்று இலங்கை மக்கள் ஐயம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அரசாங்கத்திற்கோ விடுதலைப்புலிகளுக்கோ சார்பானவர் அல்லது எதிரானவர்களோ அக்கொலை பற்றிய புலனாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் உண்மையை கண்டறிய முடியாது.

ஏனெனில் அரசாங்கத்திற்கோ விடுதலைப்புலிகளுக்கோ சார்பானவர்கள் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக புலிகளுக்கு இக்கொலையில் சம்மதமிருக்கச் கூடாது என்ற நோக்கில் புலனாய்வுகள் மேற்கொள்ளலாம்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரானவர்கள் சமாதான முயற்சிகளை குழப்ப வேண்டி விடுதலைப்புலிகளுக்கு சம்பந்தம் இருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே புலனாய்வுளை மேற்கொள்ளலாம்.

இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கம் இந்தியாவை சம்பந்தப்படுத்தாமல் புலிகளுடன் பேச்சு நடத்துவதை மனப்பூர்வமாக விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் மீது வைரம் கொண்டுள்ள குறிப்பிட்ட அந்த இந்திய புலனாய்வு குழுவினரும் புலிகளுக்கு அக்கொலையில் சம்பந்தம் இருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே விசாரணைகளை மேற்கொள்ளலாம்.



விசாரணைகளை எந்தக் குழுவினர் மேற் கொண்டாலும் விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தம் இருக்கும் என்று முடிவு செய்யப்படுமிடத்து இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடான சமாதான பேச்சுவார்த்தைகளை துண்டிக்குமா என்பது தெரியவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான, இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை குழபபவும் புலனாய்வு குழுவினர் திட்டம் கொண்டிருக்கலாம்.

## யுத்தம் வேண்டாம்

### ஒரு தாயின் குரல்

"இக்கருத்தரங்கிலே வடக்கில் இடம்பெற்றுவரும் போராட்டங்களையும் யுத்த அழிவுகளையும், அங்குள்ள மக்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் கேட்ட போது என்னால் மௌனமாக இருந்து விட்டு போக முடியவில்லை. வடக்கில் இருந்து வந்து இங்கு உரையாற்றிய திரு. செந்தில்வேல் முன்வைத்த உணர்வுபூர்வமான கருத்துக்களை நாங்கள் மறுக்கவில்லை. அவர் கூறியவை யாவும் உண்மை என்பதை உணர்கின்றோம். வடக்கு கிழக்கில் நமது சகோதர மக்கள் ஏன் போராடுகிறார்கள். அவர்கள் தமது பகுதிகளில் தலையீடு குறுக்கீடு இன்றி வாழவே போராடுகிறார்கள். அதனை மறுத்து யுத்தத்தில் ஈடுபடுவது எவ்வகையிலும் நியாயமாகாது. அவர்களுக்குரிய உரிமைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் வழங்க வேண்டும். யுத்தம் வேண்டாம். அவற்றின் அழிவுகள் எல்லா மக்களையும் பாதித்து வருகின்றது. சமாதானமே வேண்டும். இதற்காக நாம் குரல் எழுப்புகின்றோம். சிங்களவர்கள் பெரும்பான்மை, தமிழர்கள் சிறுபான்மை என்ற எண்ணத்தை விட்டு ஒழிக்க வேண்டும். நாம் அனைவரும் இந்நாட்டின் மனிதர்கள் என்னும் நிலைக்கு வருவோம். பரம்பரைப் பெருமைகளையும் போலிக் கௌரவங்களையும் கைவிட்டு தமிழர்கள், சிங்களவர், முஸ்லீம்கள் யாவரும் நாட்டின் மதிப்புள்ள மனிதர்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து வாழ்வோம். பிரச்சினைகளுக்கு யுத்தத்தால் அன்றி பேச்சுவார்த்தைகளின் மூலம் நியாயமான அடிப்படையில் தீர்வுகளைக் காண முற்படுவோம். தமிழர்கள் சிங்களவர்களுக்கிடையில் திருமணங்களைச் செய்தாவது யுத்தத்தை தொடர விடாது சமாதானத்தைக் கொண்டுவரப் பாடுபடுவோம். யுத்தத்தால் மாண்டு போவது தமிழர்கள், சிங்களவர், முஸ்லீம்கள் என்பவர்கள் அல்ல. மனிதர்கள் தான் மடிந்து கொள்கிறார்கள். இனிமேலும் இந்நிலை தொடர இடமளிக்கக் கூடாது யுத்தத்தை நிறுத்தி சமாதானம் காண்பதற்கான இதுபோன்ற இயக்கங்களை மேன்மேலும் ஊக்கத்துடன் முன்னெடுக்க வேண்டும்.

மேற்கூறியவாறு கடந்த 21-10-94 அன்று 'யுத்தத்திற்கு மாற்றுத் தீர்வு உண்டா? என்னும் தலைப்பில் கண்டி டி.எஸ்.சேனநாயக்கா நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பார்வையாளராக வந்திருந்த ஒரு சிங்களத்தாய் கேள்வி - கலந்துரையாடல் நேரத்தின் போது மிகுந்த உணர்ச்சி ததும்பிய நிலையில் எடுத்துக் கூறினார்.

இக்கருத்தரங்கினை சமாதானத்திற்கான மக்கள் கூட்டணி ஒழுங்கு செய்திருந்தது. மண்டபம் நிறைந்து காணப்பட்ட மேற்படி கருத்தரங்கில் கலாநிதி நவரட்ண பண்டார, கலாநிதி சுமண சிறி லியனகே, திரு.ச.பாலகிருஷ்ணன், திரு.சி.கா.செந்தில்வேல் ஆகியோர் உரையாற்றினர். கலாநிதி காமினி சமரநாயக்கா தலைமை தாங்கினார். முடிவில் பார்வையாளர்கள் கலந்து கொண்ட கேள்வி - பதில் கலந்துரையாடலும் இடம்பெற்றது. அன்றைய தினம் கண்டி நகரின் சகல பகுதிகளிலும், வீதிகளிலும் யுத்தத்தை எதிர்த்தும் சமாதானத்தை வற்புறுத்தியும் சுலோக அட்டைகளுடன் பரவலான பிரச்சார இயக்கம் நடாத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

## ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வழி

பொதுசன ஐக்கிய முன்னணி கடந்த பொதுத் தேர்தலில் முன்வைத்த வேலைத் திட்டத்தையும், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் தங்குதடையின்றி நிறைவேற்றுவதற்கு பூரண சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவிற்கு சகல தரப்பு மக்களும் வாக்களித்து வெற்றி பெறச் செய்வது அவசியமாகும். அதன் மூலம் கடந்த பதினேழு வருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் எதேச்சதிகார ஆட்சி அழிவுகளுக்கும் நாசத்திற்கும் உள்ளாக்கிய அனைத்துத் துறைகளையும் மீளமைத்துக் கட்டியெழுப்புவதற்கு உரிய உடனடி வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ள முடியும். அதே வேளை நாட்டில் சுவாலை விட்டெரிந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு தொடக்கி வைக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்வுப் பாதையை வலுப்படுத்தி விரைவாக முன்னெடுத்துச் செல்லவும் முடியும்.

இவ்வாறு புதிய - ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த பொதுத் தேர்தலின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை நிராகரித்த மக்கள் பொதுசன ஐக்கிய முன்னணியைப் பதவிக்குக் கொண்டு வந்தனர். அதற்குரிய அடிப்படைக் காரணம் கடந்த பதினேழு வருட காலத்தில் நடாத்தப்பட்ட ஜனநாயக விரோத, மக்கள் விரோத, தேசிய விரோத, தேச விரோத எதேச்சதிகார ஆட்சியின் மீதான வெறுப்பேயாகும். அதேவேளை சிதைக்கப்பட்ட தேசிய பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்து கட்டியெழுப்பவும், தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து அடிப்படை மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கும், தேசிய இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வினைக் காண்பதற்கும் பொதுசன முன்னணி மக்கள் முன் வாக்குறுதி அளித்துள்ளது. அத்துடன் கடந்த ஆட்சியின் நாசகாரப் போக்கிற்கு வழி சமைத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசியலமைப்பைக் . கொண்டு வந்து அனைத்து மக்களினதும் சுபீட்சத்தை உத்தரவாதப்படுத்துவதற்கும் பிரதமர் சந்திரிகாவும் அவரது ஆட்சியும் ஆரம்ப முன் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த பதினேழு வருட காலத்தில் யுத்தமயமாக்கப்பட்ட இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுப் பாதையை திறந்து செயலாற்றுவதிலும் புதிய பிரதமர் துணிவுடனும் நம்பிக்கையுடனும் ஈடுபட்டுள்ளார். இத்தகைய நல்ல சூழலை மேன்மேலும் விருத்தி செய்து கடந்த காலத்தின் இரத்தக்கறை படிந்த அனைத்து அம்சங்களையும் பூரணமாகத் துடைத்தெறிந்து நாட்டிற்கும் மக்களுக்கும் விமோசனம் அளிக்கக் கூடிய புதியதோர் நிலையினைத் தோற்றுவிப்பது அவசியமாகும்.

எனவே தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலைநாட்டவும், தேசிய பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவும், தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு காணவும் எமது புதிய - ஜனநாயக கட்சி இருள் சூழ்ந்த கடந்த ஆட்சிக் காலத்தில் குரல் கொடுத்து அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடி வந்துள்ளது. அத்தகைய அடிப்படையிலேயே கடந்த பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தது. அதன் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுசன முன்னணியின் வேட்பாளரான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவின் வெற்றிக்கு எமது கட்சி முழுமையான பங்களிப்பினை வழங்கி நிற்கின்றது.

padippakam